# விடுதலைப்புலிகள்

குரல்: 37 | பங்குனி - 1993 | அன்பளிப்பு: ரூபா 5/-


### தமிழீழத்தின் தென்பகுதியை முழுமையாக ஆக்கிரமித்து

# தாயகக் கோரிக்கையைச் சிதைக்க சிறீலங்கா அரசு பெருமுயற்சி

மட்டக்களப்பு - அம்பாறை - திருக்கோணமலை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய தென் தமிழீழத்தை முற்றுமுழுதான இராணுவ ஆக்கிரமிப்புக்குள் கொண்டு வரும் முயற்சிகளில், சிங்கள அரசு இறங்கியுள்ளது.

அப்பகுதியின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் மேலும் பல இராணுவ முகாம்களை நிறுவியும், ஆட்பற்றாக்குறையைத் தீர்க்க பொலிஸ் படையைப் பயன்படுத்தியும், தென் தமிழீழத்தைப் படையினரின் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர, சிறீலங்கா அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டபடியிருக்கின்றது.

பாரிய இராணுவ நடவடிக்கைகள் பலவற்றின் மூலம் தென்தமிழீழ நிலப்பரப்பிலிருந்து புலிகளை முற்று முழுதாக விரட்டி, பின் அங்கே பெருமளவில் சிங்களவர்களைக் குடியமர்த்திக் கிழக்கைச் சிங்களமயமாக்கி, தமிழீழ தேசியத்தின் முதுகெலும்பான தாயகக் கோட்பாட்டைச் சிதைப்பதுதான், இப்படைநடவடிக்கைகளுக்கான அரசியல் நோக்கம் ஆகும்.

தென் தமிழீழத்தில் கடந்த 33 மாதங்களாக நடைபெற்று வரும் (ஈழப் போர் – இரண்டு) தமிழ் இன அழிப்பு முயற்சியில், ஏறக்குறைய 8,000 தமிழர்கள் கொல்லப்பட்டு விட்டனர். 80 சதவீதமான தமிழர்கள் புலம்பெயர்ந்து அகதி முகாங்களிலும் காடுகளிலும் மற்றும் பாதுகாப்பான இடங்களிலும் வாழ்கின்றனர். இவர்களது பொருளாதார வாழ்வு, ஏறக்குறைய முற்றுமுழுதாகவே சிதைக்கப்பட்டுவிட்டது. புலிகளுக்கு எதிரான போர் என்ற போர்வையில், தென் தமிழீழ மக்களது சொத்துக்கள் அழிக்கப்பட்டு, அவர்களது பொருளாதார முயற்சிகளும் நாசமாக்கப்பட்டுவிட்டன. ஆனாலும் புலிகள் இயக்கத்தின் இராணுவச் செயற்பாடுகளைப் படையினரால், தடுக்க முடியவில்லை. மாறாக, அவை அதிகரித்த அளவில் இடம்பெறுவதுடன், சிங்களப் படையின் மத்தியில் பாரிய உயிர் இழப்புகளையும் ஏற்படுத்தி வருகின்றன. கடந்த போராண்டில் (1992) →





மார்ச் 8ஆம் திகதி, அனைத்துலக மகளிர் நாளன்று யாழ்ப்பாணத்தில் நடந்த மாபெரும் எழுச்சி விழாவின்போது இடம்பெற்ற அணிவகுப்பு மரியாதை நிகழ்வினையும், அணிவகுப்பு மரியாதையினை மகளிர் படைச் சிறப்புத் தளபதி ஜெனா அவர்கள் ஏற்பதையும், அவருடன் மகளிர் படைத் தளபதி விதுசா, மகளிர் படைத் துணைத் தளபதி ஜெனி ஆகியோரையும் படத்தில் காணலாம்.


## தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# புலிகள் இயக்கமும் தமிழீழக் கோரிக்கையும்

## புலிகளின் குரல்

'தமிழீழம்' என்ற தனியரசுக் கோரிக்கை - இலங்கைத் தீவில் - ஒரே இரவில் நடந்தேறிய ஒரு அரசியல் நாடகமல்ல.

நீண்டபல வருடங்களாக பேரினவாத வெறிகொண்ட சிங்கள ஆட்சியாளர்களால், தமிழினம், அரசியல் - சமூக- பொருளாதாரரீதியாக ஒடுக்கப்பட்டு - பாரபட்சம் காட்டப்பட்டு வந்தது. ஆனாலும், இலங்கை அரசின் ஒற்றையாட்சி அரசியலமைப்பிற்குள் - காலத்திற்குக் காலம் - பற்பல கோரிக்கைகளை முன்வைத்து, இனப்பிரச்சினைக்குச் சுமுகமாகத் தீர்வுகாணவே தமிழினம் முயன்றது.

ஆனால், சிங்கள ஆட்சியாளர்களோ தமிழர்களின் சாதாரண அரசியற் கோரிக்கைகளுக்குச்செவிமடுக்காததுடன், இன்னுமொரு படி மேலே சென்று, தமிழின விரோத சட்டங்களை இயற்றி, அவற்றை அரசியலமைப்புச் சட்டத்திலும் இணைத்து தமிழினத்தை மேலும் மேலும் அடக்க முயற்சி எடுத்தனர்.

மொழி, கல்வி, வேலைவாய்ப்பு, அபிவிருத்தி, காணிப் பகிர்வு போன்றவற்றில் தமிழ்மக்களுக்கு எதிராகக் காட்டப்படும் ஒடுக்குமுறைகளை நீக்கும்படி, தமிழினம் சிங்கள ஆட்சியாளர்களை வேண்டியது. வேண்டுகோள்கள் கருத்திலெடுக்கப்படாது போக, இலங்கை அரசின் சட்டதிட்டங்களுக்கு அமைய சிங்கள அரசுக்கு எதிராகப் போராடி, உரிமைகளைப் பெறத் தமிழினம் முயன்றது.

சாத்வீக வழிமுறைகளில் அமைதியாக நடந்த இந்த உரிமைப் போராட்டங்களின் காரணிகளையும் அதன் நியாயப்பாடுகளையும், சிங்கள அரசு தெரிந்து கொண்டும், அக்கோரிக்கைகளைக் கருத்திலெடுத்துப் பரிசீலிப்பதற்குப் பதிலாக, தனது படைபலத்தைக் கையிலெடுத்து வன்முறைமூலம் பதிலளித்து வந்தது.

மென்முறைவழியில் தமிழினம் உரிமைகேட்டதும் அதை வன்முறை கொண்டு சிங்கள ஆட்சியாளர்கள் அடக்குவதும், இலங்கை அரசியல் வரலாற்றில் தொடர்ந்தது.

நாட்கள் செல்லச்செல்ல, தமிழினத்தின் அரசியல் அபிலாசைகளை நசுக்குவதில், சிங்கள ஆட்சியாளர்கள் காட்டிய மூர்க்கத்தனம் - படிப்படியாக - தீவிரமாகி, ஒரு 'இன அழிப்பு' வடிவத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது.

நிலம், மொழி, பொருளாதாரவாழ்வு, பண்பாட்டு அம்சங்கள் என்று தமிழ்த் தேசியத்தின் தூண்களை இடித்துச் சிதைப்பதில், சிங்கள ஆட்சியாளர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் -வேறுவழிகளின்றி- தனது சொந்தப் பாதுகாப்பின் அவசியத்தை உணர்ந்து, ஒரு சொந்த அரசு பற்றி எண்ணத் தொடங்கியது.

இதன் விளைவாக 'தமிழீழம்' என்ற தனியரசுக் கோரிக்கை வரலாற்றுப் பிறப்பெடுத்தது.

இவ்விதம், தமிழினம் விடுத்த சாதாரண-சிறிய-அரசியற் கோரிக்கைகளைச் சிங்கள ஆட்சியாளர்கள் நிறைவேற்ற மறுத்து, மேன்மேலும் தமிழினத்தின் மீது ஒடுக்குமுறைகளைப் பிரயோகித்தகாரணத்தினாலேயே - படிப்படியாக - தனியரசு என்ற ஒரு உயர்ந்தபட்சக் கோரிக்கைக்குத் தமிழினம் செல்லவேண்டிய வரலாற்று நிர்ப்பந்தம் எழுந்தது.

ஆரம்பத்தில், தமிழீழக் கோரிக்கையானது வெறும் சுலோகமாகவே இருந்து வந்தது. தமிழினத்தின் ஏகோபித்த ஆதரவு அதற்கிருந்தும், அதற்கு ஒரு நடைமுறைவடிவம் கொடுக்கும் வல்லமை பழைய தலைமையிடம் இருக்கவில்லை.

தமிழினத்தின் தமிழீழக் கோரிக்கைக்கும், அதை நடைமுறைப்படுத்த வேண்டிய தலைமைக்குமிடையே ஒரு பெரும் இடைவெளி இருந்தது.

புலிகள் இயக்கம் இந்த வரலாற்றுப் பொறுப்பை ஏற்று, இடைவெளியை நிரப்பி, தன்னாட்சி உரிமைக் கோரிக்கையின் அடிப்படையில் தமிழீழக் கோரிக்கைக்குச் சரியானதொரு நடைமுறை வடிவம் கொடுத்தது.

ஆயுதப் போர் வழிமூலம் தமிழினத்தின் சுதந்திரப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆயுதப் போராட்ட வழியில் ஈடுபட்டிருந்த பொழுதிலும் அரசியல் தீர்வுக்கான கதவுகளை, நாம் அடைக்கவில்லை.

தமிழினத்தின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய ஒரு நியாயமான அரசியல் தீர்வை அடைவதற்கு, திம்புவிலிருந்து கொழும்புவரை எம்மாலான முழு முயற்சிகளையும் செய்திருந்தோம்.

சிங்கள அரசுடனான இந்தப் போர் தீவிரமடைந்த இன்றும்கூட அரசியல் தீர்வுக்கான கதவுகளை, அமைதிவழி மூலமான பாதைகளை நாம் மூடவில்லை. எமது இயக்கத்தின் இந்த அரசியல் நிலைப்பாட்டை பல சந்தர்ப்பங்களில் தலைவர் பிரபாகரன் அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்.

உண்மை நிலை இப்படியிருக்க, சிங்கள அரசோ, 'தமிழீழம்' என்ற தனிநாட்டுக் கோரிக்கையில் புலிகள் பிடிவாதமாக இருந்து, மாற்று யோசனைகளைத் தெரிவிக்காது அரசியல் தீர்வுக்கு முட்டுக்கட்டை போடுகின்றார்கள் என, புலிகள் இயக்கத்தைக் குற்றம்சாட்டி வந்தது.

தமிழினத்தின் தமிழீழக் கோரிக்கையானது சிங்கள ஆட்சியாளர்களுடன் பேசிப்பெறும் விடயமல்ல; அது இரத்தம் சிந்திப் போராடி எமது தாயகத்தை மீட்டு, சொந்த அரசொன்றை அமைப்பதாகும்.

ஆனால், ஒரு அரசியல் கோரிக்கை மூலம் இனப்பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வுகாண்பது என்பது அப்படியல்ல. அது பேச்சுவார்த்தைகள்மூலம் இரு பகுதியினரும் ஒரு இணக்கத்துக்கு வருவதாகும்.

மீண்டும் இப்போது, தமிழ்மக்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளைத் தீர்க்கக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தை, சிங்கள ஆட்சியாளர்களுக்கு, தலைவர் பிரபாகரன் வழங்கியுள்ளார்.

அதாவது, "தமிழர் தாயகத்தின் பூகோள முழுமை அங்கீகரிக்கப்பட்ட ஒரு சமஷ்டி அமைப்பைப் பரிசீலிக்கத் தயார்" எனத் தலைவர் அறிவித்துள்ளார்.

இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அறிவிப்பாகும்.

இந்த அறிவிப்பைச் சிங்கள ஆட்சியாளர்கள் சாதகமான முறையில் பரிசீலிக்க விரும்பாது, தட்டிக்கழிக்க முற்பட்டால், அது சிங்கள தேசம் செய்யும் ஒரு பெரும் வரலாற்றுத் தவறாகவே இருக்கும்.

அவ்விதம் தலைவரின் அறிவிப்பு நிராகரிக்கப்படுமானால் தமிழினத்திற்கு 'தமிழீழம்' என்ற தனிநாடுதான் இறுதியான - நிரந்தரத் தீர்வு என்பது, தவிர்க்க முடியாத ஒரு வரலாற்றுத் தேவையாக எழும். ❋

## தாயகக் கோட்பாட்டை சிதைக்க

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தென் தமிழீழத்தில் சிங்களப் படைகள் சந்தித்த பேரிழப்புகளை, சிங்களத் தளபதிகளே வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ளனர். அப்பாரிய இழப்புகளுக்கு ஆட்பற்றாக் குறையையும், ஆயுத பலக்குறைவுகளையும் படைத் தளபதிகள் பலர் காரணம் காட்டியிருந்தனர்.

ஆட்பற்றாக்குறையை நீக்கும் முகமாக, புதிதாகப் படைக்கு ஆட்சேர்க்கச் சிங்களப் படைகள் எடுத்த முயற்சி, வெற்றிபெறவில்லை. எனவே இப்போது, பொலிசாரைப் பயன்படுத்தி இந்த ஆட்பற்றாக்குறையைத் தீர்க்க முனைந்துள்ளன.

சிறீலங்காவைப் பொறுத்தளவில், சுமார் 60,000 ஆட்களைக் கொண்ட பொலிஸ்படையும் ஒரு ஆயுதப்படையாகவே செயற்பட்டு வருகின்றது.

1990 ஆம் ஆண்டு யூன் மாதம் சிங்களப் படையுடன் சண்டை தொடங்கும்போது, தென் தமிழீழத்தில் இருந்த பொலிஸ் நிலையங்களை இராணுவ நிலைகளாக மாற்றும் நோக்குடன், பொலிசாருக்கு மிக நவீன ஆயுதங்கள் வழங்கப்பட்டிருந்ததும், சண்டை தொடங்கியவுடன் புலிவீரர்களினால் அவை கைப்பற்றப்பட்டிருந்ததும் ஏற்கெனவே தெரிந்த செய்திகள்.

தென் தமிழீழத்தில், புலிகளால் ஊடுருவமுடியாத பாதுகாப்பான பகுதிகள் எனப் படையினர் கருதும் இடங்களில் சிங்களப் பொலிசாரை நிறுத்தி, அந்த இடங்களில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினரை எடுத்து ஒன்றாக்கி, புலிகள் இயக்கத்தின் ஆதிக்கத்திலுள்ள பகுதிகள்மீது பாரிய இராணுவ நடவடிக்கைகளைச் செய்து, தென் தமிழீழத்திலிருந்து புலிகளைத் துடைத்தெறிவது அரசின் இப்போதைய திட்டமாகும்.

சிங்களப் பேரினவாதிகளைப் பொறுத்தவரை, இனப்பிரச்சினையின் ஆபத்தான அம்சமாக தமிழினத்தின் தாயகக் கோட்பாட்டைக் கருதுகின்றனர். தமிழரின் தாயக நிலப்பரப்பை வடக்கு, கிழக்கு என்று தனித்தனியாகப் பிரித்து, கிழக்கைச் சிங்களமயமாக்கி, தமிழினத்தின் தாயக பூமியை அபகரிக்க, சிங்கள அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றது.


அம்பாறை, திருக்கோணமலை மாவட்டங்களின் பெரும்பகுதி நிலத்தையும், மட்டக்களப்பு மாவட்டத்தின்எல்லைப்புறக்கிராமங்களையும் அபகரித்து அங்கே சிங்களக் குடியேற்றங்களைச் செய்து, தென் தமிழீழத்தில் தமிழர்களின் வீதாசாரத்தைப்பெரிதும் குறைக்க அரசு முயன்றபடியுள்ளது.

அரசின் இந்த முயற்சிகளுக்குக் குறுக்கே புலிகள் இயக்கம் உள்ளது. எனவேதான் கிழக்கிலிருந்து புலிகளை முழுமையாகத் துடைத்தெறிந்து, அதன்பின் எந்தவித எதிர்ப்புமின்றி கிழக்கைச் சிங்களமயமாக்கி, வடக்கிலிருந்து நிரந்தரமாகப் பிரித்து, தமிழினத்தின் தாயகக் கோட்பாட்டைச் சிதைக்க முயற்சியெடுக்கின்றது.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே சிறீலங்கா அரசு தனது படைபலத்தைஒருங்குதிரட்டி, தென் தமிழீழம்மீது பிரயோகிக்க முடிவெடுத்துள்ளது. ❋

## தமிழீழம் மீதான போரிற்கென சிங்களப்படைக்குப் புதிய வானூர்திகள்:

# புக்காராவும் எம். ஐ. 8 உம்



'புக்காரா' போர் விமானம்

சிறீலங்கா அரசு தமிழருக்கு எதிரான போரில் ஈடுபடுத்தவென சில புதிய போர் வானூர்திகளைக் கொள்வனவு செய்துள்ளதாகத் தெரிவிக்கின்றது.

ஆர்ஜென்ரீனாவின் தயாரிப்பான 'புக்காரா' எனப்படும் போர்விமானங்களும் ரஷ்யநாட்டின் தயாரிப்பான 'எம்.ஐ.8' என்ற இராணுவ உலங்கு வானூர்திகளும் சிறீலங்காவின் விமானப்படைக்கெனக் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிங்களப் படைகளின் ஆயுதபலத்தை உயர்த்தியும் படையினரின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலமும் புலிகளைப் போரில் தோற்கடித்துவிடலாம் என, சிங்களத் தளபதிகள் நம்புகின்றனர்.

புலிகள் ஒடுக்கப்பட்டு இன்னமும் போர் ஏன் முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லை என்ற கேள்வி எழுப்பப்படும் ஒவ்வொரு தடவையும், இன்ன இன்ன ஆயுதத்தளபாடங்களும் இத்தனையாயிரம் படைவீரர்களும் இருந்தால் இவ்வளவு காலத்துக்குள் புலிகளைத் தொலைத்துவிடுவோமென, சிங்களத் தளபதிகள் கணக்குப்பார்த்து விடை கூறுகின்றனர். சிறீலங்கா அரசும் தனது தளபதிகளின் வேண்டுகோள்களை ஏற்று, அந்த ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்து, ஆட்களைத் திரட்டிக் கொடுத்துக்கொண்டே வருகின்றது.

ஆனால், வெற்றி என்பது சிங்களத் தளபதிகளின் கைகளிற்கு எட்டாத தூரத்திலேயே இருக்கின்றது. அதேசமயம் படையினரின் உயிரிழப்புகளும் ஆயுத இழப்புகளும் அதிகரித்தபடியே வருகின்றன.

சூதாட்டத்தில் ஈடுபடும் ஒருவன் தொடர்ந்து தோல்விகளையே சந்தித்தாலும் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையில், தன்னிடமிருக்கும் பணம் அனைத்தையும் சூதாட்டத்தில் வைத்து, பின்பு பணத்தைக் கடன்வாங்கியும் சூதாடி, இறுதியில் ஒட்டாண்டியாகித் தெருவில் நிற்பான்.

சிறீலங்கா அரசு தரப்பினரும் சிங்களப் படையின் உயர்தளபதிகளும் இத்தகைய சூதாடியின் மனோபாவத்துடனேயே இருக்கின்றார்கள்.

கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டி ஆயுதங்களை வாங்கி, படையின் ஆள் எண்ணிக்கையை அதிகரித்தும், தொடர்ச்சியாகத் தோல்விகளையும் இழப்புகளையுமே கண்டுவருகின்றார்கள். என்றோ ஒருநாள் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் ஆயுத தளபாடங்களுக்கெனப் பணத்தை அள்ளியிறைத்து, சிறீலங்காவின் பொருளாதாரத்தைப் படுகுழியை நோக்கித் தள்ளிக்கொண்டு செல்கின்றனர்.

1991 ஆம் ஆண்டு நடந்த ஆனையிறவுச் சமரின் பின், சில சிங்களத் தளபதிகள்,

" எங்களிடம் நல்ல டாங்கிகள் இருந்திருப்பின் வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவுக்குச் செல்ல, இருபது நாள் சென்றிருக்காது; சில மணித்தியாலங்களே போதுமானதாக இருந்திருக்கும் " என்றனர். இந்த டாங்கி வகைகளைக் கொள்வனவு செய்ய வேண்டும் என, அரசை வற்புறுத்தினர். அதன்படி அந்த டாங்கிகளும் கொள்வனவு செய்யப்பட்டு இராணுவத்திற்கும் வழங்கப்பட்டன.

அதே டாங்கிகளையும் ஆயிரக்கணக்கான படையினரையும் வைத்துக்கொண்டு, புலிகளின் மட்டுப்படுத்தப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கையின் மத்தியில், 1992 ஆம் ஆண்டு யூன் திங்களில் வெற்றிலைக்கேணியிலிருந்து இயக்கச்சிவரை நகர, படையினருக்கு ஒன்பது நாட்கள் பிடித்தன. வை–8 ரக இராட்சத விமானம் ஒன்றையும் ஏறக்குறைய 100 படையினரையும் ஒரு டாங்கியினையும் இரண்டு கவசவாகனங்களையும் இந்த முயற்சியில் படையினர் இழந்தனர்.

போரில் இறுதிவெற்றி காண்பதற்காக, கடந்த ஆண்டில் படைத்தளபதிகள் பலரின் ஆலோசனைகளின் பேரில் சிங்கள அரசு தனது படைத்துறைத் தலைமையில் அடுத்தடுத்து பாரிய மாற்றங்களைச் செய்தும், புதிய புதிய ஆயுத தளபாடங்களை வாங்கிக் குவித்தும், படையினரின் எண்ணிக்கையைப் பெருமளவு அதிகரித்தும் நடந்தது என்ன?

கடந்த ஆண்டில் மட்டும் 1400 படையினர் கொல்லப்பட்டுள்ளனர்; 1350 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன; 7 இலட்சம் ரவைகள் கைப்பற்றப்பட்டன. இத்துடன், "ஒரு டசினுக்கும் மேற்பட்ட போர் வானூர்திகள் ஒன்றில் சேதமடைந்துள்ளன அல்லது நாசமாக்கப்பட்டுள்ளன" என, நாடாளுமன்ற விவகார அமைச்சர் நாடாளுமன்றில் கூறியுள்ளார்.

இத்தகைய கணக்கு விபரங்களை வைத்துப் பார்க்கும்போது புதிய புதிய ஆயுத தளபாடங்களை வாங்கி அவற்றைச் சண்டையில் பயன்படுத்திய போதும் கூட, படையினரின் உயிரிழப்புகளைக் குறைக்க முடியவில்லை; மாறாக அது பெருகிக் கொண்டே போகின்றது.

சிறீலங்காப் படைகளிடம் புதிய புதிய ஆயுத தளபாடங்கள் வந்துவந்துசேர, அதற்குரிய எதிர்ப்பு முறைகளையும் பயிற்சிகளையும் பெற்றுக்கொள்ளும் போராளிகள், அந்த ஆயுதங்களை அழித்து – அல்லது கைப்பற்றிப் போரை நம்பிக்கையுடன் எதிர்கொள்கின்றனர்.

கடந்த பல ஆண்டுகளைப் போன்றே இவ்வாண்டும் ( 1993 ), போரை வெல்லும் நப்பாசையுடன் பல புதிய ஆயுத தளபாடங்களைச் சிங்களப் படைகள் இறக்குமதி செய்துள்ளன.

அவற்றுள் 'புக்காரா' போர்விமானங்களும், 'எம். ஐ. 8' உலங்கு வானூர்திகளும் அடங்கும்.

### புக்காரா (IA 58A PUCARA)

ஏற்கெனவே சிங்களப் படையிடம் உள்ள 'சியா மாசெட்டி' ரக போர்விமானங்களைவிட, 'புக்காரா' தரத்தில் சிறிதளவு உயர்ந்தது.

சியா மாசெட்டிக்கு ஒரு காற்றாடி உண்டு; புக்காராவுக்கு இரண்டு.

'சியா மாசெட்டி'க்கு ஒரு விமானி மட்டுமே இருப்பார்; அத்துடன் ஒரே பறப்பின்போது 300 கி. கி. எடைகொண்ட வெடிகுண்டுகளைக் காவிச்சென்று அது வீசவல்லது (50 கி. கி. கொண்ட ஆறு குண்டுகள் ). இதன் வேகம் மணிக்கு 260 மைல்களாகும்.

இதேவேளை புக்காராவில் இரண்டு விமானிகள் பயணம் செய்யமுடியும். ஒரே தடவையில் 1500 கி. கி. எடைகொண்ட வெடிகுண்டுகளை எடுத்துச்செல்ல முடியும். அது 500 கி. கி. கொண்ட மூன்று குண்டுகளாகவோ அல்லது 250 கி. கி. கொண்ட ஆறு குண்டுகளாகவோ அல்லது 125 கி. கி. கொண்ட பன்னிரண்டு குண்டுகளாகவோ இருக்கும். இதன் வேகம் மணிக்கு 310 மைல்களாகும்.

'சியா மாசெட்டி'யைப் போன்றே புக்காராவும் குண்டுகளையும் வீசும்; றொக்கட்டுக்களையும் ஏவும்; அத்துடன் 20 மி. மீ. அல்லது 30 மி. மீ. பீரங்கியையும் (cannon) பொருத்தமுடியும். எது எப்படியிருந்தாலும், ஒரே பறப்பில் 1500 கி. கி. கொண்ட குண்டுகளை மட்டுமே கொண்டுசெல்ல முடியும்.

போர்விமானங்கள் – அவை எந்த வகையாக இருந்தாலும் – இரண்டு முறைகளிலேயே குண்டுவீச்சுகளை நடாத்தும்.

(1) கிடையாகப் பறந்து குண்டு போடுவது.

(2) குத்திப் பதிந்து குண்டு போடுவது.

கிடையாகப் பறந்து குண்டுவீச்சு நடாத்தும்போது, குறித்த ஒரு இலக்கின்மீது குண்டுவீச முடியாது. பெரிய நிலப்பரப்பில் நடக்கும் சண்டைகளில் இம்முறையில் குண்டுகள் வீசப்படுவது வழமை. பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக குண்டுகளை வீசும்போதும் அடர்ந்த காடுகள் மீது குண்டுவீச்சுகள் நடாத்தும்போதும், இம்முறை பயன்படுத்தப்படும். 'வை–8', 'அவ்ரோ' ரக விமானங்கள், குண்டுகளை இந்த முறையிலேயே வீசிவந்தன.

குத்திப் பதிந்து குண்டு வீசும் முறை மூலம் இலக்குகள் தாக்கப்பட அதிகளவு வாய்ப்புகள் உள்ளன. அதேபோல விமானம் சுட்டு வீழ்த்தப்படவும் அதிகளவு வாய்ப்புகள் உண்டு.

குத்திப் பதிந்து தாக்கவரும்போது, அது எந்த நிலையை நோக்கி வருகின்றதோ அந்த நிலை அமைந்துள்ள பகுதியிலிருந்து, போராளிகள் தங்களிடமுள்ள சுரிகுழல் துப்பாக்கிகள், இலகு இயந்திரத் துப்பாக்கிகள் (எல். எம். ஜி.) மற்றும் பொதுப்பயன்பாட்டு இயந்திரத்துப்பாக்கிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)


# புக்காராவும் எம். ஐ. 8 உம்

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(ஜி. பி. எம். ஜி.) கொண்டே விமானத்தைச் சுட்டுவீழ்த்த முடியும்.

ஏனெனில், குத்திப் பதிந்து குண்டைப் போடும் வேளையில் விமானம், தரையிலிருந்து சுமார் 400 தொடக்கம் 200 மீற்றர்களுக்குள்ளேயே இருக்கும். அந்த வேளையில் இந்தத் துப்பாக்கிகளினால் விமானத்தைச் சுட்டுவீழ்த்த முடியும்.

விமானம் குத்திப் பதிந்துவரும்போதே விமானத்தின் முன்பகுதியை (மூக்கு) நோக்கி முன், பின் குறிகாட்டிகளினூடாகக் குறி வைத்து, துப்பாக்கித் தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டும்;அதுதான் சரியானது.



'புக்காரா' ரகத்தைச்சேர்ந்த — ஐ. ஏ. 58 ஏ வகை வானூர்தியினதும் (இரு இருக்கைகள் கொண்டது — பக்கப் பார்வையில் மேலே உள்ளது), ஐ. ஏ. 58 சி வகை வானூர்தியினதும் (ஒரு இருக்கை கொண்டது — பக்கப் பார்வையில் கீழே உள்ளது) மாதிரித் தோற்றங்கள்.

குண்டுகளை வீசிவிட்டு மூக்கை நிமிர்த்திப் பறக்கும்போது துப்பாக்கித் தாக்குதல் நடாத்துவது சுலபம் போல கண்ணுக்குத் தோன்றும்;ஆனால் அது பயனற்றது.

குத்திப் பதிந்து எமது நிலைகளைத் தாக்கவரும் ஒவ்வொரு வேளையிலும் சிங்கள விமானி, தனது விமானத்தைச் சுட்டு வீழ்த்தக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தை, சாதாரண ஆயுதங்களை வைத்துக்கொண்டு தரையில் நிற்கும் புலி வீரர்களுக்கு வழங்குகின்றான். அந்த அரிய சந்தர்ப்பத்தை நன்கு பயிற்சிபெற்ற புலிவீரர்கள் நன்றியுணர்வுடன் பயன்படுத்துவார்கள். இதன் விளைவு – எதிரி விமானங்களின் இழப்புத்தான்.

விமானக் குண்டுவீச்சுமூலம் ஒரு போரை வென்றுவிடமுடியாது. ஆயிரக்கணக்கான தொன்கள் நிறையுள்ள குண்டுகளை அமெரிக்க விமானப்படை இடைவிடாது வீசியபோதும்கூட, போரில் வியட்னாம் போராளிகளை வெல்ல முடியவில்லை என்பதே, இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

விமானத் தாக்குதலிலிருந்து நாம் இழப்புக்களைத் தவிர்க்கப் பல வழிமுறைகள் உண்டு. எமது நிலைகளை, அரண்களைச் சரியானபடி உருமறைப்புச் செய்ய வேண்டும். இதன்மூலம் எதிரி விமானம் எம்மை இனங்காண முடியாது. நகரும்போது பரவலாக நகரவேண்டும். இப்படி நகரும்போது தாக்குதல் நடந்தாலும் இழப்புக்கள் குறையும். குத்திப் பதிந்து தாக்க வரும்போது, பொறுப்பாளரின் கட்டளையைப் பெற்று, ஒரே சமயத்தில் விமானத்தை இலக்குவைத்துத் துப்பாக்கித் தாக்குதலை மேற்கொள்ள வேண்டும். இப்படித் தாக்கினால் ஒன்றில் விமானம் குண்டடி பட்டு விழும், அல்லது சேதமடையும், அல்லது போராளிகளின் துப்பாக்கிகளிலிருந்து பறந்து செல்லும் ரவைகள், இலக்குவைத்துக் குண்டுவீசவிடாது விமானியைத் தொந்தரவு செய்யும்.

பொதுமக்களாயின்,போர் விமானங்கள் வானில் தென்பட்ட உடனேயே பதுங்கு குழிக்குள் சென்று, பாதுகாப்புத் தேடிவிடவும். அந்தநேரம் அருகில் பதுங்குகுழிகள் இல்லையாயின் இயற்கையாகவே இருக்கும் பள்ளங்கள், கிடங்குகள் அல்லது வீதியோர வாய்க்கால்களுக்குள் பாதுகாப்புத் தேடவும். இவை எதுவும் இல்லையாயின் நிலத்தில் குப்புறப்படுத்து குண்டுச் சிதறல்களிலிருந்து பாதுகாப்புத்தேடவும்.

## எம்.ஐ. 8 [ Mil Mi 8(Hip - C) ]

இந்திய ஆக்கிரமிப்புக் காலகட்டத்தில் 'லொறி' என போராளிகளால் அழைக்கப்பட்ட வானூர்திதான் 'எம். ஐ.8'ரக உலங்கு வானூர்தியாகும். இதனுடைய முக்கியவேலை விநியோகமாகும். பெருமளவு பொருட்களை ஏற்றி இறக்கவும், கணிசமான படையினரைக் கொண்டுசெல்லவும் இது பயன்படும். அதனாலேயே 'லொறி' என்ற பட்டப்பெயரையும் பெற்றது; அத்துடன் இது தரைத்தாக்குதலை நடாத்தவும் வல்லது. இதில் றொக்கட்டுக்களைப் பொருத்தியும் ஏவலாம்.

இரண்டு விமானிகளையும் இரட்டை இயந்திரங்களையும் கொண்ட இந்த உலங்கு வானூர்தி,ஒரே தடவையில் 30 படையினரை ஏற்றிச்செல்லும் அல்லது 4000 கி. கி.எடை கொண்ட பொருட்களை ஏற்றி இறக்கும். இதனுடைய வேகம், பாரம் ஏற்றாதபோது மணிக்கு 260 கி. மீ.; பாரம் ஏற்றும்போது மணிக்கு 180 கி. மீ.

சிறீலங்கா விமானப்படை ஏற்கெனவே வைத்திருக்கும்'பெல்'ரக உலங்கு வானூர்திகள் சிறியவை; அவற்றின்மூலம் பெருமளவு பொருட்களையும் அதிகளவு படையினரையும் ஏற்றி இறக்க முடியாது.

எனவே சிங்களப் படைக்கு இருந்த விநியோகப் பிரச்சினையைத் தீர்க்கவே, சிறீலங்காவின் விமானப்படை 'எம்.ஐ.8' ரக உலங்கு வானூர்திகளைக் கொள்வனவு செய்துள்ளது.

அதே சமயம், எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் எங்காவது திடீரென இறங்கி 'கொமாண்டோ அதிரடித்' தாக்குதலை நடாத்தவும், சண்டைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது புலிவீரர்களுக்குப் பின்புறமாகப் படையினரை இறக்கி,'ஆகாய வழிமூலமான வளைத்துத்தாக்குதல்' தந்திரோபாயத்தை (Vertical Envelopment) பயன்படுத்திப் புலிகளை மடக்கிவிடவும், இந்த 'எம்.ஐ. 8' உலங்கு வானூர்திகளைப் பயன்படுத்தலாமெனச் சிங்களத் தளபதிகள் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால், அவர்கள் ஒரு உண்மையை மறந்து விட்டனர். சிங்களப் படையினர் இப்படியான ஒரு முயற்சியில் இறங்கும் போது, உயிரை அர்ப்பணிக்கத் தயாரான நன்கு பயிற்சி பெற்ற ஓரிரு புலிவீரர்கள், பதுங்குகுழிக்குள் அல்லது ஒரு பாதுகாப்பான அரணில் நின்று எதிர்த்தாக்குதலைத் தொடுத்துக்கொண்டிருந்தாலே இத்தகைய கொமாண்டோ அதிரடித்தாக்குதலைத் தாமதிக்கச் செய்து தோற்கடித்து, சிங்களப் படைக்கு பலத்த உயிரிழப்பை ஏற்படுத்த முடியும்.

இத்தகைய உலங்குவானூர்தியிலிருந்து இறக்கப்படும் மின்னல்வேக கொமாண்டோ அதிரடித் தாக்குதல்களின் வெற்றி, அதன் வேகமான செயற்பாட்டில்தான் முழுமையாகத் தங்கியுள்ளது. எனவே, இந்தக் கொமாண்டோ அதிரடித்தாக்குதல்களின் வேகத்தைத் தடுத்து நிறுத்தி, எதிரிப்படைகளை தாமதப்படுத்தி, புலிவீரர்களை வேகமாக – பெருமளவில் – நகர்த்துவதன் மூலம் தமது படைகள் முற்றுமுழுதாக அழிந்துபடக்கூடிய அபாயம் இருப்பதை சிங்களத் தளபதிகள் உணரத் தவறிவிட்டனர்; அத்துடன், கடந்தகால வரலாற்றையும் மறந்துவிட்டனர்.

1985 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி, இத்தகையதொரு கொமாண்டோ பாணியிலான நடவடிக்கை ஒன்றைச் சுதுமலையில் சிங்களப் படையினர் மேற்கொண்டனர். அப்போது 'பெல்' ரக உலங்கு வானூர்திகளையே இராணுவத்தினர் பயன்படுத்தினர். அந்தத் தாக்குதல் முயற்சியில் படையினர் வெற்றி பெறவில்லை; மிகச் சிரமப்பட்டே திரும்பிச் சென்றனர். அன்று, சிறிது தாமதித்திருந்தாலும் தரையிறக்கப்பட்ட இராணுவத்தினரில் ஒருவர்கூடத் திரும்பிச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டிருக்கும்.



'எம். ஐ. 8' இராணுவ உலங்கு வானூர்தி.

இதேபோன்று, 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 11 ஆம் திகதி, தலைவர் பிரபாகரனைக் கொல்வதற்காக இந்தியப் படையின் 'எம்.ஐ.8' ரக உலங்கு வானூர்திகள் இரண்டு, 60 இராணுவத்தினரை யாழ். பல்கலைக்கழக வளவினுள் இறக்கிவிட்டன; ஆனால், அதில் 30 இந்தியக் கொமாண்டோக்களின் உடல்களை ஏற்ற, புலிகளின் 'கன்ரர்' வாகனமொன்றுதான் வந்தது! ✱

# ஆழமான புரிந்துணர்வின் அடிப்படையில் ஆண் - பெண் சமத்துவம் மலர வேண்டும்

## தலைவரின் அறைகூவல்



**மார்ச் 8 ஆம் திகதி அன்று, அனைத்துலக மகளிர் நாளை முன்னிட்டும், அந்நாளில் எமது மகளிர் அமைப்பினால் நடாத்தப்பட்ட எழுச்சி விழா வினை வாழ்த்தியும், தலைவர் பிரபாகரன் அவர்கள் விடுத்த செய்தி.**

இன்று அனைத்துலக மகளிர் தினம். உலகப் பெண்ணினத்தின் எழுச்சி தினமாகிய இப்புரட்சிநாள் தமிழீழமெங்கும் கொண்டாடப்படுவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

எமது சமூகம் மாறிக்கொண்டிருக்கிறது. விடுதலைப் போராக வீசிக்கொண்டிருக்கும் வரலாற்றுப் புயல், எமது மண்ணில் காலம்காலமாக நிலைத்திருந்த பழைமைவாத விருட்சங்களை வேரோடு பிடுங்கி வீழ்த்திவருகிறது. எமது மனக்குகையில் குடியிருந்த மூட நம்பிக்கைப் பேய்கள் விரட்டப்பட்டு வருகின்றன. எமது சமூகக் கருத்துலகில் புதிய பார்வை மலர்கிறது. புதிய விழிப்புணர்வு தோன்றிவருகிறது. சமூக உறவுகளில் புரட்சிகரமான மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

எமது போராட்டத்தினுள் ஒரு போராட்டமாகப் பெண் விடுதலைப் போர் இன்று முனைப்புற்று வருகிறது. பெண் விடுதலை என்ற இலட்சியப் போராட்டமானது, எமது விடுதலை இயக்கத்தின் மடியில் பிறந்த அக்கினிக் குழந்தை. அதன் வளர்ச்சியும் எழுச்சியும் ஒப்பில்லாத ஒரு தனிச் சரித்திர. மண்ணின் விடிவிற்காகவும், பெண்ணின் விமோசனத்திற்காகவும் இன்று தமிழீழப் புரட்சிப் பெண் புலியாக மாறிவிட்டாள். அநீதிக்கு எதிரான ஆவேச நெருப்பாக அவள் இன்று ஆயுதமேந்தி நிற்கிறாள். இந்த வரலாற்றுத் திருப்பத்திற்கு எமது இயக்கமே வழி சமைத்துக் கொடுத்தது.

சமத்துவத்தை நோக்கிய பயணமாக பெண் உரிமைப் போராட்டம் தொடர்கிறது. பாலியல் வேறுபாட்டின் அடிப்படையில் சமத்துவமற்ற சமூக உறவுகள் உருவாக்கம் பெற்றுள்ளன. எல்லாக் காலங்களிலும், எல்லாச் சமூகங்களிலும், எல்லாப் பண்பாட்டு வடிவங்களிலும் இந்த சமத்துவமற்ற மனித உறவு நிலவி வருகிறது. பெண்ணைத் தாழ்ந்த நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கும் இந்தச் சமூக அநீதியை எதிர்த்து, இன்று உலகப் பெண்ணினம் போர்க்கொடி உயர்த்தி நிற்கிறது.

பால்ரீதியான உடற்கூற்று வேறுபாடு என்பது, இயற்கையின் திருவிளையாடலாக இன விருத்திக்கு அளிக்கப்பட்ட கொடை. உயிர்ப்படைப்பிற்காகச் சிருஷ்டிக்கப்பட்ட உடற்கூற்றின் அடிப்படையில் ஆணையும் பெண்ணையும் வேறுபடுத்தி, சமத்துவமற்ற உறவுகளைச் சமூகம் பின்னி விட்டிருக்கிறது. பாலியல் வேறுபாடும், அதன் அடிப்படையில் தோன்றிய பண்பாட்டு நியமங்களும், அவை பெண்மீது பதித்துவிட்ட படிமங்களும் பார்வைகளும் ஆண் -பெண் சமத்துவத்திற்கு முட்டுக்கட்டைகளாக நிற்கின்றன.


மனித ஆளுமை பாலியல் வேறுபாட்டிற்கு அப்பாலானது. ஆண்மைக்கும் பெண்மைக்கும் அப்பால் மனிதம் இருக்கிறது. அது மனிதப் பிறவிகளுக்குப் பொதுவானது. இந்த மனிதத்தின் ஆற்றல்களை உடற்கூறு நிர்ணயிப்பதல்ல.

பெண்ணிடமும் மனிதம் இருக்கிறது. அதன் அற்புதமான ஆற்றல்களையும், அலாதியான பண்புகளையும் பாலியல் அளவுகோலால் நிர்ணயிக்க முடியாது. எதையும் பெண்ணால் சாதித்துவிடமுடியும் என்பதற்கு, எமது போராட்டம் ஓர் உன்னத உதாரணமாகத் திகழ்கிறது.

பாலியல் வேறுபாட்டிற்குப் புறம்பாக, ஆண்மைக்கும் பெண்மைக்கும் அப்பாலான, இந்த மனிதத்தை இனம் கண்டு கௌரவிக்குமாறு பெண்ணினம் ஆணினத்திடம் அன்புக்கரம் நீட்டுகிறது. ஆழமான புரிந்துணர்வுடன் ஆணினம் இந்த அன்புக்கரத்தைப் பற்றிக்கொள்ளும் பொழுதுதான் ஆண் - பெண் சமத்துவம் சாத்தியமாகும்.

அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பு இன்று நடத்தும் தமிழீழப் பெண்கள் எழுச்சி வைபவத்திற்கு, எனது நல்லாசியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''.



மார்ச் 8 ஆம் திகதி - அனைத்துலக மகளிர் நாளன்று யாழ்ப்பாணத்தில் நடந்த மாபெரும் எழுச்சி விழாவின்போது, அணிவகுப்பு மரியாதையினை எமது மகளிர் படைப்பிரிவின் சிறப்புத் தளபதி ஜெனா அவர்கள் ஏற்கிறார்.

அவருடன் - இடமிருந்து வலமாக - கடற்புலிகளின் மகளிர் படைப் பொறுப்பாளர் நளாயினி, மகளிர் அமைப்பின் அரசியற் பிரிவுப் பொறுப்பாளர் ஜெயா, மகளிர் படைத் தளபதி விதுசா, மகளிர் படைத் துணைத் தளபதி ஜெனி ஆகியோர் காணப்படுகின்றனர்.

# தென் தமிழீழத்தில் தமிழ் இன அழிப்பு



மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மக்களின் வாழ்வு சிங்களப் படைகளால் அவலம் நிறைந்ததாகவே இருக்கின்றது. இங்கே சிங்கள இராணுவத்துடன் ரெலோ தேசத்துரோகிகளும், முஸ்லிம் வெறியர்களும், சிங்களக் குடியேற்றவாசிகளும் சேர்ந்து தமிழ் மக்களை வாட்டி வருகின்றனர்.

கேட்பவர்களின் மனதை உலுக்குமளவுக்கு ஒரு கொடூரமான இராணுவ ஆட்சி அங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. குறிப்பாக இளைஞர்களும், யுவதிகளும் பொது வாழ்க்கையை வாழ முடியாத சூழ்நிலையே, அங்கு உள்ளது. பெற்றோர்கள், வளர்ந்த பிள்ளைகளை வீட்டில் வைத்திருக்க முடியாத நிலை. 13–14 வயதிற்கு மேற்பட்ட ஆண் - பெண், ஒவ்வொரு நாளும் சாவை எதிர்பார்த்தே வாழ்ந்து வருகின்றார்கள். சிங்களப் படைகள் செய்யும் பாலியல் வன்முறைகள், சித்திரவதைகள், படுகொலைகள் அவமானப்படுத்தல், தொந்தரவுசெய்தல், பட்டினி போடல் என்பன தான் மட்டக்களப்பு - அம்பாறை மக்கள் அன்றாடம் சந்திக்கும் அவலங்களாகும்.

இங்கேயெல்லாம் தமிழர்கள் தங்களது நிலங்களில் பயிர்செய்ய முடியாது; பிள்ளைகளைப் பாதுகாப்பாக பாடசாலைகளுக்கு அனுப்ப முடியாது; தமது குடும்பத்திற்குத் தேவையான உணவைச் சேமிக்கமுடியாது. அதற்கெல்லாம் இராணுவத்திடம் அனுமதிப் பத்திரம் பெற்றிருக்கவேண்டும்.

இரவுகளிலெல்லாம் படையினரதும் ரெலோ தேசத்துரோகிகளினதும் கொடூர -மனிதாபிமானமற்ற- ஆட்சியே நடக்கும். வீடுகளுக்குள் திடுதிடுப்பென நுழைவதும் கைதுசெய்வதும், பின்னர் அவர்களைக் கொலைசெய்து வீதிகளில் போடுவதும் ஆற்றுக்குள் எறிவதும், அன்றாட நிகழ்ச்சிகள். பெண்கள் சம்பந்தப்பட்ட விடயத்தில் மிருகத்தனமும் இரக்கமற்ற தன்மையும்தான் கோலோச்சுகின்றன. இளம்பெண்களைக் கடத்திச்செல்வதும் ஏதாவது ஒரு குற்றச் சாட்டைச் சுமத்திக் கைது செய்வதும் பின்னர் அவர்களைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கி, படுகொலைசெய்து பிணங்களைப் பகிரங்கமாகவே போடுவதும், ஒரு சாதாரண நிகழ்ச்சி.

வெளிமாவட்டத்திலிருந்து மட்டக்களப்பு - அம்பாறைப் பகுதிகளுக்கு வேலை விடயமாகச்சென்று, சிலநாட்கள் தங்கிவருபவர்கள், இந்தக் கொடூரமான - அவலமான வாழ்வைக்கண்டு அதிர்ச்சி அடைகின்றனர். இப்படியும் இரக்கமற்றமுறையில் வெறித்தனங்கள் நிகழ்கின்றனவா என, ஆச்சரியப்படுகின்றனர்.

1990 ஆம் ஆண்டு யூன் மாதம் சிங்களப் படைகளுடன் போர் ஆரம்பமாகியபின், இதுவரை மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தில் மட்டும் சுமார் எண்ணாயிரம் (8,000) தமிழர்கள் சிங்களப் படைகளினாலும், முஸ்லிம் வெறியர்களினாலும், தேசத்துரோகிகளினாலும் படுகொலை செய்யப்பட்டுவிட்டனர். ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் போயுள்ளனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை இதுவரை எவராலும் கண்டு கொள்ள முடியவில்லை. மட்டக்களப்புப் பகுதியில் இயங்கும் சர்வதேச மனிதாபிமான நிறுவனங்களால்கூட, இவற்றுக்கு விடைகாண முடியவில்லை. ஏறக்குறைய இம்மாவட்டத்தில் வாழும் முழுத் தமிழரினதும் சொத்துக்கள் அழிக்கப்பட்டுவிட்டன. இங்கே வாழும் ஒவ்வொரு குடும்பத்தின் பின்னாலும், மனதை உருக்கவைக்கும் ஒரு சோகக்கதை நிச்சயமாக இருக்கும். அநேகமாக எல்லாக் குடும்பங்களும் தமது அங்கத்தவர்கள் யாரையாவது ஒருவரை இழந்தே உள்ளன. அதிலும் அக்குடும்ப அங்கத்தவர்களின் கண் எதிரிலேயே அவ்வுயிர் பிடுங்கப்பட்டிருக்கும்.

சிங்கள ஆயுதப்படைகளுடன் சேர்ந்து ரெலோ மற்றும் ஈ.பி.டி.பி. குழுக்களும் அரக்கத்தனம் புரிகின்றன.

இராணுவத்திற்குத் தகவல்களை வழங்குவதும், தமிழ் இளைஞர் - யுவதிகளைக் காட்டிக் கொடுப்பதும், சுற்றிவளைப்புகளுக்குப் பாதை காட்டுவதும், கைதுசெய்ய உதவுவதும், இராணுவத்துடன் சேர்ந்து தமிழ்ப் பெண்களைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குவதும், தமிழர்களையே கோரமாகக் கொல்வதும்தான் இத்துரோகக் கும்பல்களின் வேலைகள்.

இத்துடன், 'குளக்கொட்டி' (பச்சைப் புலிகள்) என்ற பெயரில், சிங்கள அரசு ஒரு கொலைகாரக் குழுவை மட்டக்களப்பு– அம்பாறைப் பகுதிகளில் நிறுத்திவைத்துள்ளது. இக்கொலைகாரப் படைதான், 88–89 ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் ஜே. வி. பி. இனை அடக்குவது என்ற போர்வையில், பல்லாயிரம் சிங்கள இளைஞர்களை ஈவு இரக்கம் இன்றிக் கொடூரமான வழிமுறைகளில் கொன்று குவித்தது. இதனது ரயர் போட்டுக் கொளுத்தும் முறை, உலகப் பிரசித்தமான ஒரு விடயம்.

தமது சொந்த இனத்தவர்களான சிங்கள இளைஞர்களையே கொன்று குவித்த இக்கொலைப்படை, தமிழ் இளைஞர்களை – இளம் பெண்களை எப்படி வதைக்கும் – எந்த வழிமுறைகளில் கொலை செய்யும் என்பதைச் சொல்லிவிளக்கத் தேவையில்லை. இக்கொலைப்படையின் நோக்கம் தமிழ் இளைஞர்களை – இளம்பெண்களைக் கொன்று குவிப்பதுதான். இதற்குரிய சாட்டுக்களை அவ்வப்போது அது தேடிக்கொள்ளும்.

இரவுவேளைகளில் சாதாரண உடைகளுடன் திடீரென வீடுகளுக்குள் நுழையும் இவர்கள், விளக்கை அணைத்துவிட்டு, வாய்க்குள் துணியினைத் திணித்து இளவயதுக்காரர்களை இழுத்துச்செல்வர்; சில வேளைகளில், சிறுவர் சிறுமிகளுடன் வயதுபோனவர்களும் இக்கொலைப்படையினால் கூட்டிச்செல்லப்படுவர். அப்படிக் கொண்டுசெல்லப்பட்டவர்கள் திரும்பி வருவது என்பது, வெகு அபூர்வம். அவர்களைக் கொன்றுவிட்டு எரித்தோ அல்லது முகத்தைச் சிதைத்தோ அடையாளம் தெரியாமல் செய்தபின், உடலை வீதியிலோ வயல்களிலோ அல்லது ஆற்றுக்குள்ளோ எறிந்துவிடுவர். கொல்லப்பட்டவர்களின் தலைகள், அநேகமாகத் துண்டிக்கப்பட்டிருக்கும்; வெறும் முண்டம் மட்டும் வீசி எறியப்பட்டிருக்கும்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மக்களிடம் 'வி' வெட்டு என்ற சொல் பழக்கத்தில் உள்ளது. ஆங்கில எழுத்தான V வடிவில் கழுத்து வெட்டப்படுவதையே இது குறிக்கின்றது. 'வெற்றி' (Victory) என கொலைப்படை அதற்கு அர்த்தம் கற்பிக்கின்றது.

அத்துடன் 'மோட்டார்சைக்கிள் குறூப்' என்றொரு பிரிவினர் திகிலைஏற்படுத்தியபடி, படுகொலைகளில் ஈடுபடுகின்றனர். இவர்கள் மோட்டார் சைக்கிள்களிலேயே ரோந்து வருவர்.



அநியாயமாக – குரூரமான முறைகளில் – தமது பிள்ளைகள் சிங்களப் படைகளால் படுகொலை செய்யப்படுவதைவிடப் போராளிகளாக மாறி விடுதலைப் போரில் ஈடுபடுவதையே, அங்குள்ள மக்கள் விரும்புகின்றனர்.

'குளக்கொட்டி' என அழைக்கப்படும் பச்சைப் புலிகளைப் போல இவர்களும் ஒரு தனிக்குழுவாக இயங்குகின்றனர். ஒருமோட்டார் சைக்கிளில் ஆயுதபாணிகளான இரு படையினர் வீதம், 10 அல்லது 15 மோட்டார் சைக்கிள்களில், ஒரு ஊரினுள் சகல பாதைகள் ஊடாகவும் ஒரே நேரத்தில் ஊடுருவுவர். படையினரின் இந்தத் திகில் விஜயம் மக்களைக் குலைநடுங்கச் செய்யும். இத்தகைய திகில் விஜயங்கள் இரவிலும் நடக்கும்.

வெளிவாசலூடு உட்புகும் மோட்டார் சைக்கிள்களிலிருந்து வீட்டுக்கதவைநோக்கி வெளிச்சத்தைப் பாய்ச்சியபடி, 'அக்சிலேட்டரை' முறுக்கி மக்களைத் திகிலடையச் செய்வர். கைதுசெய்து கொண்டுசெல்லும் வழக்கம் இந்தக் குழுவிடம் இல்லை. அவர்களின் கண்களுக்குச் சந்தேகத்தைக் கொடுத்தவர்களை அந்த இடத்திலேயே சுட்டுக் கொன்றுவிட்டு, உடலையும் அங்கேயே விட்டுவிட்டுச் சென்றுவிடுவார்கள்.

இவைதவிர கிராமச் சுற்றிவளைப்பு என்பது மட்டக்களப்பு–அம்பாறை மாவட்டத்தில் ஒரு அன்றாட நடைமுறை. நூற்றுக்கணக்கில் படையினர், ரெலோ தேசத்துரோகிகள் மற்றும் முஸ்லிம் ஊர் காவற்படையினரின் உதவிகளுடன் ஒரு கிராமத்தைச் சுற்றிவளைத்து, 12–13 வயதிற்கு மேற்பட்ட ஆண் – பெண்கள் மற்றும் அவர்களுடைய கண்களை உறுத்தும் நடுத்தரவயதுக்காரர்களைக் கைது செய்து, முகாமுக்குக் கூட்டிச் செல்வர்; அவர்களைப் புலிகள் என்று கூறிச் சித்திரவதை செய்வார்கள்.

தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டுக் கொட்டான்களால் தாக்கி, செத்தல் மிளகாயை நெருப்பில் இட்டு அப்புகையைச் சுவாசிக்கச் செய்வதும், பொலித்தீனை-றெஜிபோமை உருக்கி முதுகில் ஊற்றுவதும், சிகரெட்டால் உடலின் மென்மையான பகுதிகளில் சூடு போடுவதும், கை – கால் விரல்களைத் துணியால் சுற்றி அதன் மேல் மண்ணெண்ணெய்ஊற்றிக்கொளுத்துவதும், நீர்த்தொட்டிகளுள் அமுக்கி மூச்சுத் திணற வைப்பதும், அவர்களின் சித்திரவதைவடிவங்களில் சில.

கைதுசெய்யப்பட்டு இராணுவ முகாம்களுக்குக் கொண்டுசெல்லப்பட்டவர்களுள் சிலர் விடுவிக்கப்படுவர். அப்படியானவர்கள் ஏதாவது ஒரு சித்திரவதை அடையாளத்தைச் சுமந்தபடியே நடைப்பிணமாக வாழுகின்றனர் என, அப்பகுதி மக்கள் வேதனையுடன் கூறுகின்றனர். இன்னொரு பகுதியினர் ஏதாவது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு கொழும்புக்கு–சிறைச்சாலைகளுக்கென அனுப்பிவைக்கப்படுகின்றனர். ஆனால், கைதுசெய்யப்படுபவர்களில் அரைப்பங்கிற்கும் மேற்பட்டவர்கள் வீடுகளுக்குத் திரும்புவதே இல்லை; இவர்கள் கொல்லப்பட்டுவிடுவார்கள்.

கைதுசெய்யப்பட்ட தமது மகன் அல்லது மகள் அல்லது கணவன் எங்கே எனக் கேட்க, படைமுகாம்களுக்கு கண்ணீரும் கம்பலையுமாகச் செல்லும் பெற்றோர்களுக்குக் கிடைக்கும் பதில், ''விடுவிக்கப்பட்டு விட்டார்'' அல்லது "அவரை நாங்கள் கைது செய்யவில்லை'' என்பதுதான். சில வேளைகளில் கைதுசெய்யப்படுபவர்களின் விடுதலைக்காக பெருந்தொகைப் பணம் கப்பமாகக் கேட்கப்படுவதும் நடைபெறுவதுண்டு.

மட்டக்களப்பு வாவியில், மட்டு – அம்பாறை மாவட்டத்தில் ஓடும் ஆறுகளில், சிற்றோடைகளில் தமிழர்களது பிணங்கள் மிதந்து செல்லாத நாள் மிகக்குறைவாகவே இருக்கும். சாக்கால் சுற்றப்பட்ட நிலையிலும், சித்திரவதைக் காயங்களுடன் முழுநிர்வாண நிலையிலும் ஆண் - பெண்களின் பிணங்கள் மிதந்து செல்லும்.

ஏதாவது ஒரு இடத்தில் அநாதரவாக ஒரு பிணம் கிடக்கின்றது, அல்லது மிதந்து செல்கிறது எனச் செய்தி பரவும்போது, சிங்களஇராணுவத்தால்கைதுசெய்யப்பட்டுத் திரும்பி வராதுபோன இளைஞர்கள் – யுவதிகளின் குடும்பங்கள், அப்பிணத்தை அடையாளம் காண்பதற்காய் ஓடிச்செல்வது மனதை உருக்கும் காட்சியாக இருக்கும்.

மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டத்தின் மிகப்பெரும்பகுதி சிங்களப் படையின் சிறைச்சாலைபோன்று– சித்திரவதைக்கூடம் போன்று–கொலைக்களம் போன்று–இருக்கும். எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற பயங்கர சூழ்நிலைக்குள்தான், அங்கிருக்கும் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

மக்கள் தமக்குத் தேவையானஉணவுப் பொருட்களைப் பெறத் தமது வயல் நிலங்களைப் பயன்படுத்த முடியாதபடி தடுக்கப்பட்டுள்ளனர்.

நெல் விதைப்பதற்கும் இராணுவத்தின் அனுமதி பெறவேண்டும்; விளைந்தபின் அறுவடை செய்யவும், அதை வீட்டிற்கு எடுத்துச்செல்லவும், சிங்களப் படையினரிடம் இரந்து நிற்க வேண்டும்.

ஆனால், நெல்லை அறுவடை செய்து சூடுவைத்திருக்கும்போது, ஒரே இரவில் நெற்சூடுகளுக்குப் படையினர் தீ வைத்து நாசமாக்கிவிடுவர்.

கடினமான சூழ்நிலையிலும் உடல் உழைப்பைச்செலுத்தி–இருக்கும் பணத்தைச் செலவளித்து – பயிர்செய்த பின், அதன் பலனை இவர்கள் பெறும் சமயத்தில் அவற்றை அழித்து, மக்களை ஓட்டாண்டிகளாக ஆக்கிவிடுகின்றனர். இது நன்கு திட்டமிடப்பட்டுச் செய்யப்படும் ஒரு நாச வேலை ஆகும். அப்பகுதி மக்களின் பொருளாதாரத்தை அழித்துச் சிதைப்பதுதான் சிங்களப் படையின் நோக்கமாகும்.

குடும்பிமலை, பெரியவெட்டுவான், தீவிவெட்டையை உள்ளடக்கிய பெரும்பகுதிகளில் நெற்செய்கை அதிகமாக இருக்கும். அறுவடைக்குத் தயாராக இருக்கும் வேளையில், ஆண்டுதோறும் இப்பகுதிக்குள் புகும் படையினர் நெற்பயிர்களை அழித்துச் செல்வர்.

1991 ஆம் ஆண்டு அறுவடைக்காலமாகிய தை மாதம், இப்பகுதியில் பாரியதொரு இராணுவ நடவடிக்கையைச் செய்து நெல்லை அழித்தனர்.

அதே போல 1992ஆம் ஆண்டும் மக்கள் அறுவடைக்குத் தயாராகிய போதும்

(11ஆம் பக்கம் பார்க்க)

**கேட்பவர்களின் மனதை உலுக்கவைக்கும் ஒரு சோகக்கதை, இங்கு வாழும் ஒவ்வொரு குடும்பத்திற்குப் பின்னாலும் நிச்சயமாக உண்டு.**



# போராளியின் குருதிச்சுவடுகள்

# சிலுவைப் பாதையில்.....

'கண்ணால் காண்பதும் பொய்; காதால் கேட்பதும் பொய்; தீர விசாரிப்பதே மெய்' என்பதை அடிப்படையாகக் கொண்டு இயங்குபவர்கள்தான், எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் புலனாய்வுப் பணிகளை மேற்கொள்பவர்கள். புலனாய்வாளன் ஒருவனின் அறிக்கையில் காணப்படும் சிறு தவறுகூட பாரிய தாக்கத்தை ஏற்படுத்த வல்லது; எமது போராட்டத்தைப் பின்தள்ளக் கூடியது. எனவே, அவன் நிதானம் மிக்கவனாக நடந்து கொள்ள வேண்டும். கம்பியில் நடப்பது போன்ற இப்பணியினை மேற்கொண்டு வந்தவர்களில் ஒருவன்தான் கதிரவன்.

பெறுப்பாளர்கள் எதிர்பார்க்கும் பணியைச் செய்து முடிப்பது மட்டுமல்ல, மேலதிகமாக இப்படியும் - செய்யலாம் செய்விக்கலாம் என்று அவர்கள் உணரக்கூடியதாக, இவனது பங்களிப்பு அமைந்திருந்தது. அதனால், ''கதிரவனால் இது செய்ய முடியுது தானே – உங்களால ஏன் முடியாது'' என்று இவனை உதாரணம் காட்டி, சகபோராளிகளைப் பொறுப்பாளர்கள் ஊக்குவிக்குமளவுக்குப் பணியாற்றினான் இவன். குறிப்பாகச் சொன்னால், இவனது வாழ்க்கை சகபோராளிகளுக்குப் பாடவிதானமாக அமைந்தது. முகாமில் பகல் முழுவதும் நாளாந்தப் பணி: இரவில் காவல் பணியின்போது தனக்கும் நேரத்தைப் பங்கீடு செய்தல்; இந்த இடைப்பட்ட நேரத்தில் தனது வேலைகள் பற்றிய அறிக்கைகளைத் தயாரித்தல் – இது தான் இவனது வாழ்க்கை. இந்த வாழ்க்கையில் ஒவ்வொரு போராளியையும் முழுமையானவர்களாக, எதிர்காலத்தில் தனது பணிகளைப் பொறுப்பேற்று நடத்தக்கூடியவர்களாக உருவாக்கினான். தான்செய்யும் வேலையில், குறைந்தது அரைவாசியையாவது செய்தோமா என்ற உணர்வைப் போராளிகளுக்கு உருவாக்குவதன் மூலம், படிப்படியாக அவர்களை முழுமையாக்குவது இவனது பாணி.



ஜெருசலேம் பெரிய தேவாலயத்தின் முன்னால், அநீதிகள் புரிபவருக்கெதிராக ஆவேசத்துடன் சென்று சாட்டையால் அடித்த யேசுதான் பெரிதாகத் தெரிந்தார்.

பொதுமக்களைப் பொறுத்தவரை இவன் பழகும் விதம், 'வாழ்வில் என்றுமே மறக்கமுடியாதவன் கதிரவன்' என்ற உணர்வைத் தோற்றுவிக்கும். இவனது வாழ்வு வித்தியாசமானது. இவன் சாதாரண மனிதனாக வாழத் தொடங்கியவனல்ல...... குருத்துவக் கல்வியை மேற்கொண்டு கிறிஸ்தவ மதகுருவாக உருவாகவிருந்த ஒருவன்தான், போராளியாக மாறியிருக்கிறான்; இரண்டுமே மக்களுக்காகத் தம்மை ஒப்படைக்கும் பணிதான்!

* * *

சுமார் $2\frac{1}{2}$ மைல் நீளமும் $\frac{1}{2}$ மைல் அகலமுமானதுதான் எழுவைதீவு. சுமார் 175 குடும்பங்கள்வரைதான் அங்கிருந்தன. கடற்றொழில்தான் அங்கு பிரதானமானது. அடிக்கடி தெரியும் கடற்படைப் படகுகளும், குமுதினிப் படகு பற்றிய நினைவுகளும், ஆக்கிரமிக்கப்பட்ட தீவில் தாம் சிக்கிக் கொண்டிருப்பதை அங்குள்ளவர்களுக்கு உணர்த்தும். இத்தீவில்தான் இவன் பிறந்தான். இவனது இயற்பெயர் கிறிஸ்ரியன் பேர்னாண்டோ. இவனுடன் சேர்த்து குடும்பத்தில் 13 பேர்.

ஓலை வீட்டில் இருந்த இவனது குடும்பத்தினர், இவன் பிறந்த காலத்தில்தான் கல்வீடு கட்டத் தொடங்கினார்கள். எனவே, வாசலில் சீமேந்தின் ஈரத்தினிடையே இவனது பாதத்தைப் பதித்து மகிழ்ந்தார்கள். அப்போதெல்லாம் நினைத்திருக்க மாட்டார்கள், இந்தப் பிஞ்சுப் பாதங்கள் எதிர்காலத்தில் மக்களுக்காகச் 'சிலுவை' சுமக்குமென்று.

எழுவைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் ஐந்தாம் வகுப்புவரை மட்டுமே கல்விகற்க முடியும்; அதன்பின் கடல் கடந்தால்தான் உயர் கல்வி. எனவே, இவன் 6 ஆம் வகுப்பைக் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் படித்தான். இப்பகுதி இராணுவ நடவடிக்கைக்குட்பட்டதால், பின்னர் இளவாலை ஹென்றியரசர் கல்லூரியில் இவனது கல்வி தொடர்ந்தது. இங்கு 10 ஆம் வகுப்பில் சித்தியெய்திய காலத்தில்தான் குருத்துவக் கல்வியை மேற்கொள்ளத் தீர்மானித்தான் இவன். ஏற்கெனவே இவனது ஒரு சகோதரர் குருத்துவக் கல்வியைப் பயின்று மதகுருவாக உள்ளார். அவரைப் போலவே உருவாக விரும்பினான் இவன். யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் உயர்கல்வியைக் கற்றவாறே குருத்துவ வாழ்வில் புகுந்தான். பாடசாலை விடுமுறை நாட்களில் இவன் எழுவைதீவுக்குச் செல்வதுண்டு.

இக்காலகட்டத்தில் ஒருநாள், கடல்வழியாக எட்டுக் குதிரைவலு இயந்திரம்இணைக்கப்பட்ட படகில் பயணமாகிக் கொண்டிருந்தனர் இன்பம், குட்டி, அப்ஸ், ராஜன் ஆகிய நான்கு போராளிகள். அது இந்திய இராணுவத்தினர் எம்மண்ணினை ஆக்கிரமித்திருந்த காலம். அவர்களின் நடவடிக்கைகள் காரணமாக, தாங்கள் தங்கியிருந்த இடத்திலிருந்து தற்காலிகமாக இடம் மாறியிருப்பதற்காக இப்பயணத்தை மேற்கொண்டனர். அவ்வேளை சிறீலங்காக் கடற்படையினரின் அதிவேகப் படகொன்று இப்படகினை நெருங்கியது. எனவே, மோதல் தவிர்க்கமுடியாததாகியது. இம்மோதலில், அப்படகில் வந்த சிறீலங்காக் கடற்படையினரில் ஒரேயொருவனே தப்பினான்; ஏனையோர் உயிரிழந்தனர். தப்பியவன் இவர்களை நோக்கிச் சுட்டபடியிருந்தான்.

போராளிகளின் படகு ஆபத்திலிருந்து தப்பிவிட்டது. எனினும், மோதல் நடந்து கொண்டிருந்தவேளை, இப்படகினைச் செலுத்திக்கொண்டிருந்த பொதுமகன் கடலில் குதித்துவிட்டார். எனவே, படகினைச் செலுத்த ஆள் இல்லை; போராளிகளே படகினைச் செலுத்த முயன்றனர். படகு அப்படியே எழுவைதீவில் கரையொதுங்கியது. அப்போராளிகள் எழுவைதீவு மக்களால் உபசரிக்கப்பட்டனர். அப்போராளிகளை உபசரித்தவர்களுள் இவனும் ஒருவன். இக்காலகட்டத்தில் திலீபன் நினைவு நாள் வந்தது. மக்களுக்கு ஊழியம் செய்வதற்காகக் குருத்துவ வாழ்வில் புகுந்தவன் மனதில், தற்கொடையாளி திலீபன் பெருமதிப்புக்குரியவனாக இருந்தான். எனவே, இந்நாளைச் சிறப்பாகக் கொண்டாடத் தன்னாலியன்ற அத்தனையையும் செய்தான் இவன்.

26.11.1988 அன்று, இவன் கல்விகற்கும் சம்பத்திரிசியார் கல்லூரியினுள் புகுந்தனர் இந்திய இராணுவத்தினரும் தேசவிரோதிகளும். ''நக்குகின்ற நாய்க்குச் செக்கென்ன, சிவலிங்கமென்ன'' என்று கூறுவார்கள். அதுபோலவே தமிழீழ மக்கள் மீதானஇனப் படுகொலையைச் சிறீலங்காப் படையினரிடமிருந்து பொறுப்பேற்றிருந்த இப்படைகளுக்கு, வைத்தியசாலையென்றோ கல்லூரியென்றோ வித்தியாசம் காணத் தெரியவில்லை. கல்லூரியிலிருந்த வண. பிதா பிலேந்திரன் தாக்கப்பட்டார்; பக்கத்திலுள்ள புனித மரியாள்பேராலயத்தினுள் இருந்த சக்கரியாஸ் என்ற இளைஞர் கைது செய்யப்பட்டுக் கொண்டுசெல்லப்பட்டார்; பின், இவர் ஈச்சமோட்டைப் பகுதியில் பிணமாக மீட்கப்பட்டார். அந்தப் பேராலயத்தில் பியானோ வாசிப்பதுடன், ஊழியம்செய்து வந்தவர் சக்கரியாஸ். வண. பிதா பிலேந்திரன் தாக்கப்பட்டதும், சக்கரியாஸ் கைதுசெய்யப்பட்டுப் பிணமாக மீட்கப்பட்டதும் இவன் அறிய நடந்த சம்பவங்கள். இச்சம்பவங்கள் இவன் மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தின. இதுவரை, ''ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு'' என்று போதித்தபடி மற்றவர்களுக்காகத் தன்னை வருத்தி ஊழியம் செய்பவராகத் தெரிந்த யேசு, இப்போது தெரியவில்லை; மாறாக, ஜெருசலேம் பெரிய தேவாலயத்தின் முன்னால், அநீதிகள் புரிபவருக்கெதிராக ஆவேசத்துடன் சென்று சாட்டையால் அடித்த யேசுதான் பெரிதாகத் தெரிந்தார்.

* * *

விடுமுறை நாட்களில் இரவு, பகலென்று போராளிகளுடனேயே தங்கினான் இவன். அவர்களது நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானித்தான். இதுவும் அடிப்படையில் மற்றவர்களுக்காக வாழும் வாழ்க்கை என்பதால், இந்த வாழ்க்கை பிடித்துப் போயிற்று. அதனால், 01-01-1990 அன்று, குருமடத்தில் இருக்க வேண்டிய இவன் இரவோடிரவாக இயக்கத்திற்குச் சென்று விட்டான். சில நாட்கள் அனலைதீவில் தங்கியிருந்த இவன், மீண்டும் எழுவைதீவு வழியாக யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றான். எனினும், எழுவைதீவில் தரையிறங்கவில்லை; படகினுள்ளேயே மறைந்திருந்தான். வழக்கமாகபோராளிகளுக்கான உணவுப் பொட்டலங்களைக் கட்டிக் கொடுக்கும் இவனது அன்னைக்கு, அன்று அதிலொன்றைத் தனது மகனுக்காகவும் கட்டுவது தெரியாமலிருந்தது' அந்த உணவுதான் தாயின் சமையலில் உண்ணும் இறுதிச்

சாப்பாடு என்பதை அவனும் அறிந்திருக்க வில்லை. படகு புறப்படும்போது இவன் எழுந்து நின்றான். அந்த அழகிய தீவை நன்றாக இரசித்தான். அது சுதந்திர பூமி யாக, எமக்குச் சொந்தமாகவிருக்கும் நாளைப் பற்றிய கற்பனைகளுடன் பயணத் தைத் தொடர்ந்தான். ஆனால், மீண்டும் அந்தத் தீவின் புழுதி இவனுடலில் பட வேயில்லை.

இவன் இயக்கத்திற்குப் போகும்போது தனது அன்னைக்கு எழுதிய கடிதத்தில், ''இந்த ஊரில் முதல் குருவானவரும் எங்க ளுடைய குடும்பத்தில்தான்; முதல் போராளி யும் எங்களுடைய குடும்பத்தில்தான்'' என்று குறிப்பிட்டிருந்தான். அதுவும் ஒரு பெருமைதான் என்பதை உணர்ந்தார் இவ னது அன்னை.

* * *

மணலாற்றில் தனது இராணுவப் பயிற்சியை முடித்துக்கொண்டான் இவன். அங்கேதான் கிறிஸ்ரியன் பெர்னாண்டோ 'கதிரவனாக' மாறினான். யூலைமாதத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோத லொன்றில் கையில் காயமடைந்தான். இக் காயம் குணமடைந்ததும் இவன் தீவகப் பகுதியில் புலனாய்வுப் பிரிவின் உதவிப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். அக் காலத்தில் தகவல்களை மட்டும் பெற்றுக் கொள்ளவில்லை; மக்களு டைய மனங்களையும் வென்றெடுத்தான். அவர்கள் மனம் வேதனைப்படக்கூடிய வாறு ஒருபோதும் இவன் நடந்ததில்லை. அனுபவமுள்ள பல போராளிகளே,மக்களை அணுகும் விடயம் தொடர்பாக இவனிடம் ஆலோசனை பெற்றுள்ளனர் என்றால், இவன் எந்தளவுக்கு மக்கள் மனதில் இடம் பெற்றுள்ளான் என்பதைப் புரிந்துகொள்ள லாம்.

1991 ஆம் ஆண்டு தீவுப்பகுதியை இராணுவத்தினர் முற்றுகையிட்டனர். உலங்கு வானூர்திகளினதும், குண்டு வீச்சு விமானங்களினதும் இரைச்சல் காதைச் செவிடாக்கியது. இந்த முற்றுகைக் குள் இவன் சிக்கிவிட்டான். எல்லோரும் யாழ்ப்பாணத்தை நோக்கி மிக வேகமாக நகர்ந்துகொண்டிருக்கையில், இவன் மட்டும் இன்னும் உள்ளே சென்றான். வேலணை யிலிருந்து புங்குடுதீவைநோக்கிச் சென்றான். அங்கு இயக்கத்தின் புலனாய்வு நடவடிக் கைகள் பற்றிய பல முக்கிய ஆவணங்கள் இருந்தன. அவை சிறிலங்காப் படையின ரிடம் சிக்கிவிடக்கூடாது என்பதற்காகவே, அங்கு விரைந்தான். அங்கிருந்து அவற்றை எடுத்துக்கொண்டு, இவன் வேலணையின் பிரதான வீதியைக் கடந்ததற்கும் சிறிலங்கா இராணுவம் அந்த இடத்தைக் கைப்பற்றிய தற்குமிடையில், மிகச் சில விநாடி இடை வெளியே இருந்தது. உயிரைப் பணயம் வைத்துத்தான் அதை மீட்டிருக்கிறான். இது இவனது பொறுப்புணர்ச்சிக்கு உதாரணம்.

இவனுக்குப் பொறுப்பானவர்கள் மனத் தில் இவன் வித்தியாசமானவனாகத் தெரிந்தான். குறிப்பிட்ட தவறுக்காக, இன்ன தண்டனை உனக்கு என்று இவனிடம் அறிவித்தால் போதும்; கண்காணிக்கத் தேவையில்லை. அத்தண்டனையைச் செய்து முடித்துவிட்டால் அறிவிப்பான்; இல்லை யேல், இன்ன காரணத்துக்காக – இன்ன வேலையால் – இத்தண்டனையைச் செய்து முடிக்கவில்லை என்றோ அல்லது இவ் வளவு தண்டனையை முடித்துள்ளேன், மிகுதியை நாளை செய்து முடிக்கிறேன் என்றோ இவனிடமிருந்து அவர்களுக்குக் குறிப்பு வரும்.

தீவகத்திலிருந்து வந்த பின்னர், இவன் புலனாய்வுப் பிரிவின் நிர்வாக அலுவலகம் ஒன்றுக்குப் பொறுப்பாகஇருந்தகாலத்தில்,மிக முக்கியமான ஆவணமொன்று தொலைந்து விட்டது. இதற்காக இவனுக்கு வழங் கப்பட்ட தண்டனை, ஒரு பெட்டியைத் தூக் கித் திரிதல். அப்பெட்டி சங்கிலியினால் இவனது கையுடன் இணைக்கப்பட்டிருந்தது. தண்டனைக் காலம் முழுவதும் இவன் அத னுடனேயே திரிந்தான். யாழ். நகரத்தினுள் இவனுக்கு வேலையிருக்கும்; முக்கியமான கூட்டங்களுக்குப் போகவேண்டியிருக்கும். எல்லாமே பெட்டியுடன்தான். குளிப்பதற்குப் பெரும்பாலும் குளத்தையே தேர்ந்தெடுத் தான். அந்தப் பெட்டியையே சலவைக் கல் லாகவும் பாவித்தான். அப்போதெல்லாம், தன்னுடனிருந்த போராளிகளுக்கு, தான் செய்த தவறு எவ்வளவு பாரதூரமானது என்றும், அதனால் ஏற்படக்கூடிய விளைவு கள் என்னவென்றும் விளக்கினான். அது போலவே, தன்னுடனிருந்து தவறு செய்யும் போராளிகளுக்கு, அத்தவறின் விளைவாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களையும் இவன் விளக்குவான். அந்த விளக்கங்கள் இவன் மீதிருந்த மதிப்பை மேலும் உயர்த்தின.



**கப்டன் கதிரவன்**

(ம. கிறிஸ்ரியன் பெர்னாண்டோ)

பிறப்பு : 03-03-1972

வீரச்சாவு: 23-11-1992

எல்லோரையும் போல சண்டையில் கலந்துகொள்ளவேண்டும் என்ற ஆசை இவனுக்கும் இருந்தது. இராணுவ நெருக் கடிகள் மிகுந்த நேரங்களில் அலுவலகத்தில் இவனைக் காணக்கிடைக்காது. பரபரப்பு முடிந்த பின்னர்தான் அலுவலகப் பக்கம் தென்படுவான். தலையைச் சொறிந்து கொண்டே, எந்த இடச் சண்டையில் தான் கலந்துகொண்டான் என்பதைச் சொல் வான் – தனக்குப் பொறுப்பானவர்களிடம்.

இவனது போராட்ட வாழ்வின் இறுதிப் பகுதி,வவுனியா தடைமுகாம் பகுதியிலேயே கழிந்தது. புலனாய்வுப் பிரிவு மிகவும் விழிப் புடன் பணியாற்றவேண்டிய பகுதி இது. எல்லை கடந்தால் எதிரியின் பிரதேசம். எனவே, தேசத்துரோகிகளின் நடமாட்டத் தைத் தடுக்க வேண்டும். அதே வேளை, ஏனைய பொதுமக்களை அநாவசியமாகச் சிரமப்படுத்தக் கூடாது; அவர்கள் மனம் நோகாதவாறு நடக்க வேண்டும். எனவே, இப்பணி இலகுவானதல்ல.

இப்பணிகளைத் தொடர்ந்துவரும் காலத்தில், மாவீரர் வாரம் நெருங்கியது. மாவீரர் வாரத்துக்கான பணிகளை ஆரம் பித்த போது, நண்பர்களிடம் சொன் னான்: ''எனக்கு மாவீரர் வாரத்துக்கை சாகிறதுதான் விருப்பம்; அதுக்குள்ள சாகிறதுக்குக் குடுத்து வச்சிருக்கவேணும்.''

* * *

அன்று நொச்சிமோட்டைப் பக்கமாக சிறிலங்கா இராணுவத்தினர் வெளியேறி விட்டனர் என்று, தகவல் கிடைத்தது. உடனே இவன் தன் நண்பர்களுடன் இரா ணுவ முன்னேற்றம் நிகழ்ந்த இடத்தை நோக்கி விரைந்தான். 'சண்டைக்கு முதல் இராணுவத்தினர் எதுவரை வந்துள்ளார்கள் என்பதை அறிய வேண்டும்.இதற்கு நொச்சி மோட்டைப் பாலத்தடியில் உள்ள ஒரு மரத்தின் மீது ஏறவேண்டும்' எனத் தீர் மானித்தான். அவர்களோ அப்பாலத்தைத் தாண்டி வந்துவிட்டார்கள். அந்த விபரம் இவனுக்கும், இவனது நண்பர்களுக்கும் தெரியாது. இவர்கள் இராணுவத்தின் வியூகத்துள் அகப்பட்டுவிட்டனர். இந் நிலையில் இவனது நண்பனொருவன் காய மடைந்தான். எனினும், சண்டை நிகழ்ந்து கொண்டிருக்கும்போதே அவன் மீட்கப் பட்டான். இந்நிலையில் கதிரவன் காயம டைந்தான். போர்முனையிலிருந்து வைத்திய சாலைக்குப் போகும்வரை, தனது அலு வலகத்திலிருந்த ஆவணங்களைக் காப் பாற்றிப் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு செல்லுமாறு, கூறிக்கொண்டிருந் தான். அவை சிறிலங்கா இராணுவத்தின ரிடம் சிக்கிவிட்டால் மிகப்பெரிய பின்ன டைவு ஏற்படும்.எனவே, எப்பாடுபட்டேனும் அவை பாதுகாக்கப்படவேண்டியவை.

கதிரவன் சொல்லிக்கொண்டேயிருந் தான்–அதைக் காப்பாற்றும்படி. கிளிநொச்சி மருத்துவமனையில் இவன் அனுமதிக்கப் பட்டிருந்த நேரத்தில்,அவற்றினைக் காப் பாற்றியாயிற்று என்ற செய்தி, இவனுக்கு உரைக்கப்பட்டது.அதைக் கேட்டதும்,அது வரை இருந்த இவனது பரபரப்பு ஓய்ந் தது;பரபரப்பு மட்டுமல்ல, இவனது உட லின் இயக்கமும்தான்.

''எனக்கு மாவீரர் வாரத்துக்கை சாகிறதுதான் விருப்பம்; அதுக்குள்ள சாகி றதுக்குக் குடுத்து வச்சிருக்கவேணும்'' என்ற இவனது வார்த்தைகளும், இவனது வாழ்வும் எங்களால் என்றுமே மறக்கமுடியாதவை.

இவனது பிரிவுச் செய்தி சிறிலங்காப் படையினர் மூலமாகத்தான் இவனது அன்னைக்குக் கிடைத்தது. அவர் அந்த வீட்டில் பதிக்கப்பட்டிருந்த இவனது பிஞ்சுப் பாதங்களின் அடையாளங்களைப் பார்த் திருப்பார்.

''சீவியத்தில் என்னை நேசித்தவர் களே, மரணத்திலும் என்னை மறவாதீர்'' என்ற வாக்கியம், அவருக்கு நினைவில் வந் திருக்கும்! ✲

# தமிழீழப் பெண்களின் மாபெரும் எழுச்சி விழா!

*மார்ச் 8 ஆம் திகதி அன்று, அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு, பிரமாண்டமான ஓர் எழுச்சிவிழா யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்டது.*

*எமது இயக்கத்தின் மகளிர் அமைப்பினரால் ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்பட்ட, இந்த மாபெரும் பேரணியும் எழுச்சி விழாவும், பெண்கள் நிலைப்பாட்டில், இந்த மண்ணில் பெரியதொரு சமூக மாற்றம் நிகழ்ந்துகொண்டிருப்பதைக் காட்டி நிற்கின்றன.*

*காலங்காலமாக ஒடுங்கிக் கிடந்து, பழைமைவாத மூட நம்பிக்கைகளுக்குள் மூழ்கிப்போய் இருந்த தமிழீழப் பெண்ணினம், இன்று விழிப்புற்று - புதியதொரு வேகம் கொண்டெழுந்து - எழுச்சி பெறுகின்ற வரலாற்று மாற்றம் நிகழ்வதை, அன்றைய நிகழ்வு துல்லியமாகக் காட்டி நிற்கின்றது.*

*பல்லாயிரக்கணக்கில் பெண்கள் அணிதிரண்டு - பெண்களின் மேம்பாடடையாத நிலையினைச் சித்திரிக்கும் ஊர்திகளுடன் - நீண்ட பேரணியாக வந்து, யாழ். பல்கலைக்கழகப் பெருந்திடலில் பெருந்திரளாகக் குவிந்து, இவ் எழுச்சி விழாவைக் கொண்டாடினர்.*

*இவ் எழுச்சி விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக, எமது பெண்கள் படையணிகளினதும், தமிழீழ காவல்துறையின் பெண்கள் பிரிவினரதும், பாடசாலை மாணவிகளினதும் அணிநடை நிகழ்வு இடம்பெற்றது. இவ் அணிநடை மரியாதையை, எமது மகளிர் படைப்பிரிவின் சிறப்புத் தளபதி ஜெனா அவர்கள் ஏற்றுக்கொண்டார். அவருடன் மகளிர் படைத் தளபதி விதுசா, மகளிர் படைத் துணைத் தளபதி ஜெனி, கடற்புலிகளின் மகளிர் படைத் தளபதி நளாயினி, மகளிர் அமைப்பின் - அரசியற்பிரிவு- பொறுப்பாளர் ஜெயா ஆகியோரும், அணிநடை மரியாதை ஏற்பு நிகழ்வில் பங்கேற்றனர்.*

*இதேபோன்ற எழுச்சி விழாக்கள் வன்னி. முல்லை, மன்னார் மாவட்டங்களிலும் நடாத்தப்பட்டன.* ✲

# அன்றும்.. இன்றும்..

தொண்ணூறாம் ஆண்டின் போர் தொடங்கிய பின்னாலான நாட்கள். எங்கும் வெறிச்சோடிய தெருக்கள். போரோசையைத் தவிர வேறோசை கேட்காத நேரம். இரவில் மட்டுமல்ல இருள். மக்களின் மனதிலும் அச்சமெனும் இருள். ஆழ்ந்த சிந்தனையில் ஒடுங்கி தலை தொங்கிய மக்கள். நிமிர்ந்து பார்த்தால் முகத்திலே சினப்புமில்லை; சிரிப்புமில்லை. தம் முன்னே தோன்றிய பூதாகரமான போர்ச் சூழலை எவ்வாறு புரிவது? எப்படி முகங்கொடுப்பது? எவ்வாறு இசைவாக்கம் பெறுவது? உடனே புரியவில்லை மக்களுக்கு. குண்டு வீச்சில் பாய்ந்தோடிய குருதியின் மணமே எங்கும் வியாபித்த நேரம். அண்டை அயலில் ஒலித்த பேச்சுக்கள் புதிய தொனியில் – மரணபயத்தின் அங்கலாய்ப்பில் – உயிர் தப்ப வேண்டுமே என்கிற ஆவலில், ஒலித்த நேரம். ஒலிக்கும் குரல்கள் இவ்வாறுதான் ஒலித்தன.

மதியநேரம். வானில்குண்டு வீச்சு விமானங்கள் வட்டம். வீட்டினுள் ஒடுங்கியிருந்தவன் குளிக்கலாமென்று கிணற்றடி செல்கிறான். கிணறோ மறைப்பின்றி வெளியாக உள்ள காணியில். தாய் உரத்த குரலெழுப்புகிறாள்: “மோனே ஊரடங்குச் சட்டம் போட்டாச்சாம். உள்ளே வா. மேலேயிருந்து பார்த்தால் குளிக்கிறது தெரியும். குண்டைப் போட்டிடுவான்”. இடை நடுவில் குளிப்பை விட்டு மகன் ஓடுகிறான்.

இன்னொரு வீடு. துவைத்த துணிகளை உலரப் போட மகள் முனைகிறாள். தந்தை சொல்கிறார்: “பிள்ளை கனதுணிகளைக் காயப் போட்டால், காம்ப் என்று வீட்டை நினைப்பான்கள். வெய்யில் இல்லாவிட்டாலும் பரவாயில்லை, மரநிழலில் உடுப்புகளைப் போடு”.

முன்னால் உள்ள வீதியில் போராளிகளின் வாகனம் செல்கிறது. மருண்டு, அரண்டு மக்களின் பார்வை. சென்ற வாகனம் ஏதோ கோளாறால் நிற்கிறது. அண்டை அயல் வீடுகள் காலியாகின்றன. வீட்டுக்காரர் முணுமுணுக்கிறார்: “நாசமாய்ப் போக...... என்ரை வீட்டுக்கு முன்னாலை வந்து நிண்டுட்டாங்கள். அவன் (விமானி) கண்டான் எண்டால் வீடு சரி” அவர் ஆற்றாமையினால் அரற்றுகிறார்.

இரவிலும் குண்டு வீச்சு தொடங்கி விட்டது, அதுவும் சகடை வீசத் தொடங்கிவிட்டது. குண்டுவிழுந்து வெடித்த பின்னரே எங்கேயென்று அனுமானிக்க முடியும். மக்கள் செவியெல்லாம் பாம்புச் செவியாகின. சகடையின் ஓசையைத் தவிர வேறெதுவும் காதில் நுழையாது. பலாலியை விட்டு பெருமூச்சுடன் சகடை கிளம்பும் போதே, ஒலிவாங்கிகளாக காதுகள் உயிர்ப்புப் பெற்றன. பிறந்த குழந்தை தாயொலி கேட்கமுன் குண்டொலி கேட்டுக் கண் விழித்துக் கதறிய நேரம். “குடிமனைக்குள் போடுறானே. கோதாரியில போவான். கடவுளே உனக்கு கண்ணில்லையா”? என, மக்கள் கதறிய காலம் அது. “மரங் கொடி பச்சைகள் பொசுங்கிய நாற்றம். ஈனக் குரலில் தவிப்பு. நாய்களின் ஊளை. நகரம் இறந்துபடுமோ” எனக் கவிஞர்கள் ஓலமிட்ட நேரம்.

பின்னர் தொண்ணூறும் முடிந்தது. இன்று தொண்ணூற்று மூன்றும் ஆகிவிட்டது. இன்று மக்கள் தலை நிமிர்ந்து செல்கிறார்கள். சீறுகிறார்கள், சினக்கிறார்கள், சிரிக்கிறார்கள், பாடுகிறார்கள், ஆடுகிறார்கள். ஆனால் அழுகிறார்களில்லை. “உன்னி உன்னி” சைக்கிள் ஓடி உழைக்கிறார்கள். ஓய்கிறார்கள் இல்லை. அண்மையில் மிகையொலி விமானம் சித்தன்கேணியில் குண்டு வீசுகின்றது. சைக்கிளில் செல்லும் மக்கள் நிமிர்ந்து பார்க்கிறார்களில்லை. பார்த்தால் வீதி விபத்தில் சிக்க நேரிடும் என்பது அவர்கட்குத் தெரியும். “கண் துஞ்சார் ..... ... கருமமே கண்ணானார்” என்ற பாடல் மனதிலே வடிவம் கொள்கிறது.

இருவர் பேசிக்கொண்டே செல்கிறார்கள்: “அட இப்ப சுப்பர் சொனிக்கிலிருந்து றொக்கட் மோட்டரும் அடிக்கத் தொடங்கிட்டாங்கள் போல”. மற்றவர் சொல்கிறார்: “இல்லையடாப்பா, இது ‘கனன்’ கண்டியோ. கடற்படை பீரங்கி போலை இது விமானத்திலை பெல்டிலை போகும். பட்டினை அமத்தினால் போதும். மொந்தன் வாழைப் பழத்தின் சைசிலை” என, கையால் அளவும் காட்டிச் சொல்கிறார். தெருவெங்கும் வாகனங்கள்–போராளிகளின் வாகனம் மட்டுமல்ல; பொது மக்கள் வாகனமும்தான்.

இரவில் வீடுகளில் வெளிச்சங்கள். ஆலயங்களில் மின்னொளிகள், உலங்கு வானூர்தியைக் கண்டோ விமானங்களைக் கண்டோ, யாரும் விளக்கணைக்கிறார்கள் இல்லை. பதிலாக குப்பி விளக்கையாவது ஏற்றுகிறார்கள். காக்கை பறக்கிறது. விமானங்கள் பறக்கின்றன. மக்கள் பார்க்கிறார்கள். மண்வெட்டி, கலப்பைகளைப் போலத் துப்பாக்கிகளைக் கணிக்கிறார்கள். அற்புதம் நிகழ்ந்திருக்கின்றது. இசைவாக்கம் பெற்று இயல்பாக வாழ மக்கள் முனைகிறார்கள். ஆனாலும் இடியோசை போல ‘ஷெல்’ வீழ்ந்து வெடிக்கின்றது. குண்டு வீச்சுக்கள்–சிதறும் அங்கங்கள்–பாயும் பச்சைக் குருதி – எதுவுமே மாறவில்லை. ஆனால் மக்கள் மாறி இருக்கிறார்கள். துயரங்கள் ஆழமான வடுவாக, ஓடும்குருதி உறைந்த பனிக்கட்டியாக மனதிலே உறைய, மக்கள் மலையாக இறுகிவிட்டார்கள். சினம் என்னும் நெருப்பு கொழுந்துவிட்டெரிய, வியர்வை ஆறாக ஓட, உடற் தசை தளர, உயிர்க்குலை நடுங்க உழைத்து, தாமும் வாழ்ந்து தாயகத்தையும் வாழ வைக்கிறார்கள். இறப்பு இயல்பானது ஆனால் மகத்தானது என்பதையும், மக்கள் புரிந்துவிட்டார்கள். இவர்களைத்தான் வள்ளுவன், “கூற்றுவன் உடன்று (வெகுண்டு) மேல்வரினும் கூடி எதிர்நிற்கும் மக்கள்”. “ஒட்டார் (பகைவர்) பின் சென்று சென்றொருவன் வாழ்தலின் அந்நிலை கெடுதல் நன்றென வாழும் மக்கள்”.

“நெருநர் (நேற்று) உளனொருவன் இன்றில்லை எனும் பெருமை உடைத்து இவ்வுலகம்” என்பதை உணர்ந்த மக்கள் என்கிறான்.

உணர்வுரீதியான எம் மக்களின் இந்நிலையை அறிவுரீதியாக ஒப்பிட்டு இப்போது பார்த்தால், முன்னர் தேசிய இனம் என்றால் என்ன என்கிற மரபிலக்கணத்தை உருப்போட்டது ஞாபகம் வருகின்றது. தொடர்ந்த தாயகம், பேசும் மொழி ஒன்று, நீண்டவரலாறு, சொந்தமானபொருளாதாரம், கலை பண்பாடு எனப் படித்து, அதற்குள் தமிழினத்தை நுழைக்கலாமா முடியாதா என, ஆராய்ச்சிகள் செய்த காலம் அது. பலர் முடியும் என்றனர்; சிலர் முடியாது என்றனர். இன்று, தேசிய இனம் பற்றிய நவீனமான–பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட – வரைவிலக்கணத்தையும் பார்க்கலாம்.

1) கடந்த காலத்தில் வியத்தகு பணிகளைச் செய்தவர்கள் என்கிற எண்ணமும், இனிமேல் செய்யப் போகின்றவர்கள் என்ற எண்ணமும்.
2) தேசிய வீரர் (மாவீரர்) பலரைக் கொண்டிருக்கும் தன்மையும்.
3) மண்பற்றுக்கு முதலிடமும், ஒன்றுபடவேண்டும் என்கிறஎண்ணமும்.
4) குறிப்பிட்ட பகுதியில் தொடர்ந்து வாழ்வதோடு மட்டுமல்லாமல், அவ்

(11 ஆம் பக்கம் பார்க்க)

# புதுயுகம் வருகுது!

“நல்ல இன அடை முட்டைகள் விற்பனைக்கு உண்டு”. இது எம் தமிழ் நாளிதழ் ஒன்றில் வெளிவந்த சின்னஞ்சிறு விளம்பரம்! இதன் கீழ் –

“கூரைத் தகடுகள் (சீற்) விற்பனைக்கு உண்டு” என்ற விளம்பரம் காணப்படுகிறது. இதன் கீழ்?

“லண்டன் பிரஜா உரிமை உள்ள 32 வயது ‘சாட்டட் எக்கவுண்டனுக்கு’ அழகான, படித்த மணப்பெண் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும்”.

இந்தத் தம்பி எம் தாய்மண்ணை விட்டுப் போயுள்ள போதிலும் அவர் இங்குள்ள ஒரு பற்றை மட்டும் கைவிடவில்லை, அதாவது சீதனப் பற்றை! இது வேடிக்கைக்குரியதல்ல, ஆழ்ந்த வேதனைக்குரியது, அவமானத்துக்குரியது.

“சீதனமூலம் ஆண்மை பிட்சாபாத்திரம் ஏந்துகிறது” எனச் சிந்தனையாளர் சிரித்திரன் இவற்றைத் தமக்குரிய முறையில் இடித்துரைத்துள்ளார்! ஆனால் எந்த மருந்தும் சிலரிடம் வேலை செய்வதாயில்லை! சீதன முறை இருந்துதான் தீரும் - அதை அழிக்க முடியாது - என்பது சிலரது கருத்து, அல்லது நம்பிக்கை.

வீடு, நகை, வங்கியில் வைப்புப் பணம், வீட்டாருக்குப் புறம்பாக இனாம், கலியாணச் செலவுக்குத் தனியாகக் காசு, ஒப்பேற்றியவருக்கு இதற்கெனத் தரகுக் கூலி என விலை பேசிப் பெறப்படும் மணமகன், இதற்காக எம் சமூகத்தில் நாண வேண்டியதில்லை! அவனே பின்னர் எசமான் என்ற பதவியை |வகிக்கிறான்! மென்மையுணர்வு, சமத்துவம், மனமகிழ்வு என்பதிலும் பார்க்க காசுக்கு முதலிடமும் ஆணின் அதிகாரத் தொனிக்கு அனுமதிதருதலுமே இங்கு நிலைகொண்டுள்ளன. எம் சமுதாயத்தின் ஆண் ஆதிக்க மரபு இதனை மிக அழுத்தமாய் நிலைநாட்டியுள்ளது! பெண்ணானவள் உணவு தயாரிக்கவும் உடை கழுவவும் கணவனின் குறிப்பறிந்து ஒழுகவும் வாழ்நாளைக் கழிப்பதே “அணி” எனக் கொள்ளப்படுகிறது.

“அவன் தன் பெண்டிலை அடிக்கிறான். அதில் நாம் தலையிட முடியாது” என, ஆண் ஆதிக்கத்தை வெகு நாள் வலியுறுத்தி நின்றது எம் பாழான சமூகம்! இங்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தை யான் பெரும் மதிப்போடு பார்க்கிறேன். உள்ளம் தானாக இணைகிறது. காரணம் –

**விடுதலையுணர்வு, போர்த்திறன், துணிவு, தற்கொடை என்பவற்றுடன் சமுதாயப் புரட்சியில் பெண் இனத்திடையே ஒரு புதுயுகத்தைக் கொண்டுவந்துள்ளவர்கள் விடுதலைப் புலிகளே.** ஆண் ஆதிக்கம் என்பது இன்று இனம் காணப்பட்டு, அது குறிவைக்கப்படும் கட்டம் தொடங்கிவிட்டது! அடங்கிக் கிடந்த பெண்ணினம் இன்று ஆயுதம் தாங்கும் பெண்ணினமாக மாறிவிட்டது.

இதுபற்றி ‘அடேல் ஆன்’ எனும் பெண்மணியார் வரைந்துள்ள சில வரிகள் இதோ–

“அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் பெண்களும் இராணுவத்தில் சேர்க்கப்பட்டு போர்முனைகளுக்கு அனுப்பப்பட்டபோதிலும், நேரடிச் சண்டையில் இவர்கள் ஈடுபடுத்தப்படுவதில்லை. மருத்துவம், விநியோகம், தொலைத்தொடர்பு போன்ற பின்கள வேலைகளிலேயே பெண் இராணுவம் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் பெண்களாலும் திறமையாகப் போர்புரிய முடியும் என்ற உண்மையை நிரூபித்துக் காட்டுவதில், தமிழீழப் பெண்கள் உலகுக்கு முன் உதாரணமாகத் திகழ்கிறார்கள்”.

இவ்வித அனல் அனைய ஒளியும் வீறும் வேகமும் எங்கிருந்து வந்தன? இளையோர் மட்டுமின்றி முதியோரும் இந்த உண்மையை உணர்ந்திடக் கடமைப்பட்டவரே. இந்தப் புதுயுகம் தலைவர் பிரபாகரன் எமக்களித்த உடைமை. துன்பங்கள் அலையலையாக வந்தபோதும் அவற்றை ஏற்று முன்செல்லும் ஊக்கம், உறுதிப்பாடு, தமிழினத்திற்கு அந்தத் தலைவன் தந்துள்ள பெருநிதியம். எனவேதான் நிலைக்கிறோம்; நின்று முன்செல்கிறோம். பகைவன் தன்னுள்ளே எம்மை வியக்கிறான்; பல முறை பதறியும் விட்டான்!

இந்தப் போர்ச் சூழலிலுங்கூட, ஊறிவிட்ட முன்னைய இழிவுகளின் எச்ச சொச்சங்கள் எம்

(11 ஆம் பக்கம் பார்க்க)

# தென் தமிழீழத்தில்

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பிமலையில் ஒரு இராணுவ முகாமை அமைத்து, நெற்சூடுகளையும் நெல்வயல் களையும் அழித்தனர்.

இம்முறை, பயிர்செய்வதற்கு முதலீடு கள் இல்லாமல் மக்கள் அவதிப்பட்ட போது, 'கெயர்' ஸ்தாபனம் சிறிதளவு உதவிசெய்து நெல்விதைப்பிற்கு உதவி யது.

ஆனாலும் இந்த ஆண்டும் ( 1993) தீவிவெட்டை, நவிண்டியாமடு, மகிழவெட்டு வான், கொக்கட்டிச்சோலையின் வயற் பிரதேசங்களில் நுழைந்து சூடுகளுக்குத் தீயிட்டு, நெல்வயல்களுக்குள் உழவு இயந் திரங்களை ஓட்டி ,வயல்களை அழித்துள்ள னர். சூடடித்து முடிந்த வயல்களிலிருந்து நெல்மூடைகளை ஏற்றிச்சென்றுவிட்டனர்.

இத்துடன் வந்தாறுமூலை, களுவங் கேணி போன்ற சில இடங்களில் சந்தை களில் இருந்து அல்லது கடைகளில் இருந்து உணவுப்பொருட்களை வாங்கித் தமது வீடு களுக்குக் கொண்டு செல்வதாயின், ஒருவ ருக்கு ஒரு நாளைக்குத் தேவையான அரிசி சாமான்களையே கொண்டுசெல்ல சிங்கள இராணுவம் அனுமதிக்கும். ஒரு குடும்பத்தில் ஐந்து உறுப்பினர்கள் இருந்தால் அந்த ஐவருக்கும் தேவையான உணவுப்பொருட் களை ஒருவர் வாங்கிசெல்ல முடியாது. சிறுவர்களாக இருந்தாலும் சரிதான் நோயாளிகள், வயோதிபர்களாக இருந்தா லும் சரிதான் அவரவர்கள் சென்றே தங் களுக்குத் தேவையான உணவுப்பொருட் களை வாங்கிவர முடியும். இதை மீறும் ஒருவர் - அவர் ஆணோ பெண்ணோ - கொடூரமான சித்திரவதையை அனுபவிக்க வேண்டி இருக்கும். இந்த அளவுக்கு சிங் கள இராணுவம் மிருகத்தனமாகச் செயற் படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத் தளவில் எஸ். ரி. எவ். எனப்படும் விசேட அதிரடிப் படையிடமே ஆட்சி அதிகாரம் உள்ளது. அங்கே வசிக்கும் தமிழ்மக்கள் குடும்பம் குடும்பமாக இராணுவ முகாமில் பதிந்து, அதற்குரிய அடையாள மட்டையை வைத்திருக்க வேண்டும். பாடசாலைப் பிள்ளைகளுக்கும் தனியான பதிவுண்டு. வெளியூருக்குப் போகவேண்டுமாயின் இராணுவத்திடம் அனுமதி பெறவேண்டும். மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாது விட்டால் இராணுவ முகாமுக்குச் சென்று அதற்குரிய காரணத்தைச் சொல்ல வேண் டும்; அந்தக் காரணத்தைப் படையினர் நம்ப மறுத்தால் சித்திரவதை நடக்கும். புலிகளுடன் தொடர்பு என்று கூறியே சித்திரவதை செய்வர். சித்திர வதையிலி ருந்து உடனடியாகத் தப்புவதற்காக, பல மாணவர்கள் 'ஆம்' என்றே பதிலளிக்க முற்படுவர். பின்னர் அவர்களைச் சிறைச் சாலைகளுக்கு அனுப்பிவைத்துவிடுவர்.

மட்டக்களப்பு நகரை அண்டிய பகுதி களைப் பொறுத்தளவில், அரை மைலுக்கு ஒரு தடை முகாம் என்றரீதியில் சிங்களப் படைகளின் சோதனைச் சாவடிகள் இருக் கும்.

பாடசாலைகளுக்குச் செல்வதாயினும் சரி, வைத்தியசாலைக்குப் போவதானாலும் சரி, கடை - சந்தைகளுக்குப் போவதானா லும் சரி, ஒவ்வொரு தடைமுகாமிலும் உட லும் - பொருட்களும் சோதனை இடப்பட்ட பின்பே அனுமதிக்கப்படுவர். இத்தகைய சோதனைச்சாவடிகளில், சிங்கள இராணு வத்துடன் சேர்ந்திருக்கும் ரெலோ, ஈ. பி. டி. பி. தேசத்துரோகிகளும் மக்களை வாட்டி வதைக்கின்றனர்.

வீதிச்சோதனை என்ற போர்வையில், மக்களிடமிருந்து பணம் பறிக்கும் நடவடிக் கைகளில் ஈடுபடுகின்றனர்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங் களில் ஆண்கள் போக்குவரத்துச் செய்வ தென்பது மிகமிகக் குறைவு. உத்தியோகம் பார்க்கும் ஆண்களைத் தவிர மற்றவர்கள் தெருவில் இறங்குவதேயில்லை. எனவே குடும்பப் பெண்கள்தான் பொருட்கள் வாங்க கடைதெருவுக்குச் செல்வர்; அவர்களிட மிருந்தே பணத்தையும், பொருட்களையும் ஈ. பி. டி. பி. கும்பல்கள் பறித்துச்செல்வர்.

இரவில் வீடுகளுக்குள் புகுந்து கொள்ளைகளில் ஈடுபடும் இத் துரோகக் கும்பல்கள், பகலில் சிங்கள இராணுவத் துடன் இணைந்து படுகொலைகளில் ஈடுபடு கின்றன.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல இத் துரோகக் கும்பல்களினால், மட்டக்களப்பு - அம்பாறை மக்கள் சொல் லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்ற னர்.

சிங்களப் படைகள் ஒருபுறமும், தேசத்துரோகிகள் இன்னொருபுறமும், முஸ் லிம் வெறியர்கள் மறுபுறமும், சிங்களக் குடியேற்றவாசிகள் இன்னொருபுறமுமாக மட்டு - அம்பாறைத் தமிழர்கள் நான்கு பக்கங்களாலும் சூழப்பட்டு, இனப்படு கொலைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இப்போது சர்வதேச மனித உரிமை நிறுவனங்களில் ஒன்று, மட்டக்களப்பு நக ரில் அலுவலகம் ஒன்றைத் திறந்துள்ளது. ஆனாலும் படையினரால் கைதுசெய்யப்படு வதையோ காணாமல்போகச்செய்வதையோ இந்த நிறுவனத்தால் தடுத்துநிறுத்த முடிய வில்லை.

முன்னர் உடல்களைப் பகிரங்கமாக வீசியும், ரயர்போட்டு எரித்தும், தலைக ளைத் துண்டித்தும் வந்தனர். இப்போது அப்படிப் பகிரங்கமாகச் செய்யாது, இரகசிய மாக, தடயங்களின்றிச் செய்கின்றனர்.

மட்டக்களப்பு நகரில் உள்ள காட்டுக் கந்தோர் என்ற இடத்தில்,விசாரணைப்பகுதி என்ற பெயரில் சித்திரவதைக் கூடமொன்று உள்ளது. அங்கே கொல்லப்படும் தமிழ் மக்களது உடல்கள் சாக்கினால் சுற்றப் பட்டு, மட்டக்களப்பு வாவிக்கு மறுகரையில் இருக்கும் வவுணதீவு இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுத் தடயமில்லாது எரிக்கப்படுகின்றன.

மட்டு - அம்பாறை மாவட்டத்தில் வாழும் மக்களில் 70 வீதத்தினர் விவசாயி கள். 20 வீதத்தினர் மீன்பிடித்தொழில் செய்பவர்கள். ஆனாலும் விவசாய முயற்சி யைச் செய்யவிட்டுப் பின் அழிக்கின்றனர்; வாவியில் மீன்பிடியையும் தடைசெய்துள்ள னர். இதனால் 90 வீதமான மக்கள் நிவா ரணத்தை எதிர்பார்க்கும் நிலைக்குத்தள்ளப் பட்டுள்ளனர்.

தன்னம்பிக்கையுடன், சொந்தக்காலில்- சுயமரியாதையுடன்-தமிழர்கள் வாழ்வதைச் சிங்கள அரசு திட்டமிட்டுத் தடுக்கின்றது. தமிழர்தேசியத்தை அழித்து விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்குச் சிங்கள அரசு கடைப்பிடிக்கும் வழிகளில், இதுவும் ஒன்றாகும்.

இன்று, மட்டு - அம்பாறை மாவட்டத் தில் 80 வீதமான மக்கள் அகதிமுகாங்க ளிலும் - காடுகளிலுமே வாழ்கின்றனர். இந்த உண்மையை,சிங்கள ஆயுதப்படைகளுடன் கைகோத்தபடி இருக்கும் தமிழ்க்குழு ஒன் றின் நாடாளுமன்ற உறுப்பினரே கூறியுள் ளார்.

எல்லையோரமுள்ள சிங்களக் கிராமங் களுக்கு அருகிலும் மற்றும் முஸ்லிம் கிரா மங்களுக்கு அருகிலும், இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள கிராமங்களிலும் தமிழ்மக்கள் அச்சத்தின் காரணமாக வாழ்வதில்லை.

இவ்வாறு மட்டு - அம்பாறை மக்களது வாழ்வு அவலம் நிறைந்ததாகவே இருக் கின்றது.

ஆனாலும், சுதந்திரக் காற்றைச் சுவா சிப்பதற்காக- ஆக்கிரமிப்பு இராணுவத்தை அப்புறப்படுத்துவதற்காக - இந்த அவலங் கள் எதையும் எதிர்கொள்ள அவர்கள் தயாராகவே இருக்கின்றனர். படுகொலை கள் அம்மக்களின் விடுதலை உணர்வை மழுங்கடிக்கவில்லை; மாறாகப் புடம்போடு கின்றன. விடுதலைப்போரில் இளைஞர் களும், பெண்களும் பெருமளவில் இணை கின்றனர். அநியாயமாக - குரூரமான முறை களில்- தமது பிள்ளைகள் சிங்களப் படைக ளால் படுகொலை செய்யப்படுவதைவிடப் போராளிகளாக மாறி, விடுதலைப் போரில் ஈடுபடுவதையே அங்குள்ள மக்கள் விரும்பு கின்றனர். ❋

---

## புது யுகம்

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

*சமூகத்திடையே இன்னும் வாழ்ந்துகொண்டி ருக்கின்றன!*

*பெண்ணின் தாழ்வுற்ற வாழ்வு; அதனை மிதித்து நிற்கும் ஆணாதிக்கம்-*

*எங்குமில்லாத சீதன வடிவங்கள்-*

*அதனை வளர்த்துவரும் கயமைத் தரகர்-*

*சாத்திரம் எனும் சாபக்கேட்டின் அழுத்தம்-*

*பழைமையையே வலியுறுத்தும் பெரியோர்-*

*சாதியுட் சாதி-*

*இவ்விதம் எத்தனையெத்தனை துன்ப விலங்குகள்!*

*இவை உடையவே போகின்றன என்பதைத் தலைவர் தந்துள்ள இலட்சிய வழி உறுதித் தெளிவுடன் காட்டி நிற்கிறது! இந்தப் பிழம் பின் ஒளியிலே சிறுமையின் இருள் மறை யவே போகின்றது. காலம் எழுந்துவிட்டது- வேண்டுவது எம் அனைவரது இணைவும் வீறு கொள் செயலுமே!*

- நாக. பத்மநாதன் ❋

## அன்றும்

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்விடத்தை வெளியாரி டம்இருந்துபாதுகாத்துவர முயல்கின்ற முனைப்பும்.

5) தனியொரு மொழியோடு அல்லது தொடர்புபட்ட பேச்சுவழக்கோடு, நாம் ஒரே இனக்குழு என்கிற ஆழமான எண்ணமும் நீண்டகாலத் தொடர்பும் கொண்ட மக்களே தேசிய இனம் என்கிற வரையறைக்குள் உட் படுவார்கள் என, அறி ஞர் உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

போராட்டம் மக்களின் மன தில் மாற்றங்களை ஏற்படுத்தி யுள்ளதா என்றகேள்விக்கு, விடை கிடைத்துவிட்டது! ❋

## படையினரின்

( 12 ஆம் பக்கத் தொடர்ச்சி )

பிழைக்கவேண்டுமாயின், அந்தப் போரை ஒன்றுதிரண்டு - உறுதியுடன் - எதிர்கொள்ளவேண்டிய ஒரு வரலாற்றுத் தேவையையும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

சிங்கள அரசும் அதன் ஆயுதப் படைகளும் மேற் கொள்ளும் தமிழ் இன அழிப்பிற்கு இடம்கொடுத்து அவ மானத்துடன் அழிவதா? அல்லது வீரத்துடன் ஆயுத மேந்திப் போராடி, விடுதலை பெற்றுச் சுதந்திரமாக - கௌரவமாக உயிர் வாழ்வதா?

வீரமும் அர்ப்பண உணர்வும் நிறைந்த சில ஆயி ரம் இளம் வீரர்களைக்கொண்ட புலிகள் இயக் கம், சிங்களப் படைகளைத் தடுத்து நிறுத்தி கணிசமான அளவு மண்ணை விடுவித்து, அதைப் பாதுகாக்கப் போராடமுடியுமானால், இன்னும் சில ஆயிரம் தமிழ் இளைஞர்களும் இளம் பெண்களும் புலிப்படையில் சேரும் போது, நிலைமை எப்படி மாறும் எனச் சிந்தித்துப் பாருங்கள்...! ❋

# படையினரின் இன அழிப்புக்கு குடாநாடு இலக்காகுமா?

புலிகள் இயக்கத்திற்கெதிராகப் போர்புரிவதாக உலகிற்குக் கூறிக்கொண்டு, சிங்கள அரசு தமிழின அழிப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது என்ற உண்மையை பெரும்பாலான எமது மக்கள் இதுவரை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை.

இத்தீவிர இனஅழிப்பு முயற்சிகள், இன்று தென் தமிழீழத்தில் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன.

ஈழத்தமிழினத்தை இனப்படுகொலை செய்து எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்க, சிங்களப் பேரினவாதம் திடசங்கற்பம் பூண்டிருப்பதை, வெளிப்படையாகவே காணக்கூடியதாக உள்ளது.

விடுதலைத் தாகம்கொண்டு, உரிமைகோரிக் கிளர்ந்தெழும் மக்கள் இனங்களை இனப்படுகொலைசெய்து, அம்மக்கள் உரிமைப் போராட்டங்களை ஒடுக்குவது, நீண்டகாலம் தொட்டே ஆதிக்கசக்திகளின் ஒரு பண்பாக இருந்துவருகின்றது.

பொதுவாக, உலகம் முழுவதும் நடைபெற்ற – நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற – இன அழிப்புக்களை இரண்டு வகைகளுக்குள் அடக்குவது வழமை.

ஒன்று, குறித்த இன மக்களை நேரடியாகவே படுகொலை செய்வதன்மூலம் அம்மக்களை இனத்தை அழித்தொழிக்க முயல்வது. இரண்டு, அம் மக்களினத்திற்கு மூலாதாரமாக விளங்கும் மொழி, நிலம், பண்பாடு, பொருளாதாரவாழ்வு ஆகியவற்றைச் சிதைத்து இனத் தனித்துவத்தை இல்லாமல் செய்வது.

இரண்டாம் உலகப் போர்க் காலத்தில், 60 இலட்சம் யூத மக்களை நச்சுவாயு அறைகளுக்குள்ளும், தடுப்புமுகாம்களில்வைத்துச் சுட்டுக்கொன்றும், ஜேர்மனிய சர்வாதிகாரி கிட்லர் ஒரு இன அழிப்பில் ஈடுபட்டான். இதுபோல சுமார் 500 வருடங்களுக்கு முன்னர், அமெரிக்க மண்ணின் பூர்வீகக் குடிகளான செவ்விந்திய இனத்தையும், தென் அமெரிக்கக்கண்டத்தின் ஆதிக் குடிகளையும், முறையே ஆங்கிலேயர்களும், ஸ்பானியர்களும் இதே வழியில் இனப்படுகொலை செய்து, அவ் இனமக்களை முற்றாகவே அழித்து, அவர்களது தாயகத்தையும் அபகரித்துவிட்டனர். இந்தோனேசியாவின் ஆளுகைக்குள் இருக்கும் கிழக்கு திமோர் மக்களும் இவ்வகையான இனஅழிப்புக்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றனர். பொஸ்னிய மக்களும் இவ்விதமானதொரு கொடூர இனப் படுகொலைக்கு ஆளாகியுள்ளனர்.

இன்று, இந்த நவீன யுகத்தில், பெரும்பாலான ஆதிக்க அரசுகள் ஓர் இன மக்களைப் படுகொலை செய்வதற்குப் பதிலாக, அத்தேசிய இனத்தின் மூலாதாரங்களைப் படிப்படியாகச் சிதைத்து, நுட்பமான முறையில் இன அழிப்பை மேற்கொள்கின்றன.

ஆனால் சிங்கள ஆட்சியாளர்களோ இந்த இரண்டு வழிகளையும் பயன்படுத்தி தீவிரமானமுறையிலும் – கோரமான வடிவங்களிலும் – தமிழின அழிப்பில் ஈடுபடுகின்றனர்.

புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள வட தமிழீழத்தில் ஒருவிதமாகவும், சிங்களப் படைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தென் தமிழீழத்தில் வேறுவிதமாகவும், இந்த இன அழிப்பு முயற்சியில் சிங்கள அரசு இறங்கியுள்ளது.

தென் தமிழீழத்தைப் பொறுத்தவரையில், அது சிங்கள ஆயுதப் படைகளின் இரும்புப் பிடிக்குள் சிக்கிக் கிடக்கின்றது. அதனால் அது வெளிஉலகத் தொடர்புகளை முற்றாகவே இழந்து, தனித்துக் கிடக்கின்றது. இதன் காரணமாக அப் பிரதேசத்தில் ஒரு கோரமான வடிவத்தில் – வெளியில் தெரியாதபடி – தமிழ் இன அழிப்பு முயற்சிகள் நடக்கின்றன.

படுகொலைகள், பாலியல் வன்முறைகள், நில அபகரிப்புக்கள், தமிழர்களை அவர்களின் சொந்தக் கிராமத்திலிருந்து விரட்டியடித்தல், அவர்களின் பொருளாதாரவாழ்வைப் பகிரங்கமாகவே சிதைத்தல் என்று ஒரு உச்சவடிவத்தில், தென்தமிழீழம் இன அழிப்புக்குள்ளாகிக் கொண்டிருக்கின்றது.

'இரண்டாவது ஈழப்போர்' என அழைக்கப்படுவதும், கடந்த 33 மாதங்களாக இடைவிடாது தொடர்ந்து நடைபெறுவதுமான இந்தப்போரில், தென் தமிழீழத்தில் மட்டும், ஏறக்குறைய 8,000 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இது, இக்காலப் பகுதியில் தமிழீழமெங்கும் சிங்களப் படைகளால் கொல்லப்பட்ட தமிழர்களில், 85 சதவீதத்திற்கும்மேல் என்பது, குறிப்பிடத்தக்கது. இவர்கள் சிங்கள ஆயுதப் படைகளாலும் அதன் கருவிகளான சிங்கள – முஸ்லிம் ஊர்காவற் படைகளினாலும், துரோகக் கும்பல்களினாலும், பல்வேறு முறைகளில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சிங்களப் படைகளின் அட்டூழியங்களுக்கு முகங்கொடுத்தபடி, தமது சொந்தக் கிராமங்களிலேயே வாழ்ந்துவந்த தமிழ் மக்களை அங்கிருந்து அடித்து விரட்டி, அகதி முகாம்களில் வாழும்படி படையினர் நிர்ப்பந்தித்துள்ளனர். இதன் காரணமாகவும், உயிர் அச்சத்தின் காரணமாகவும் தென் தமிழீழத்தின் பெரும்பகுதி மக்கள் தமது வீடுகளை விட்டுப் புலம்பெயர்ந்து, அகதி முகாம்களிலும், காடுகளிலும், மற்றும் பாதுகாப்பான பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்விதம் புலம்பெயர்ந்த தமிழர்களின் கிராமங்கள்பலவற்றில் சிங்கள மக்களைக் கொண்டு வந்து குடியேற்றி, நில அபகரிப்பும் மேற்கொள்ளப்படுகின்றன.

இதேசமயம், தமது சொந்தக் கிராமங்களில் வாழ்கின்ற தமிழ் மக்களினது பொருளாதார பலத்தை அடியோடு அழிக்கும் முயற்சியிலும், சிங்கள அரசு இறங்கியுள்ளது. தென் தமிழீழத்தைப் பொறுத்தவரை, 90 வீதத்திற்கும் மேற்பட்ட மக்களது பொருளாதாரவாழ்வு,விவசாயத்திலும் மீன்பிடித்தொழிலிலுமே தங்கியுள்ளது. ஆனால் இங்கே விவசாயமும், மீன்பிடியும் படையினரால் தடைசெய்யப்பட்டுள்ளன. சிலவேளைகளில், சில பகுதிகளில் விவசாயத்திற்கு அனுமதியை வழங்கிவிட்டு, அறுவடை நேரத்தில் வயல்களுக்குச் சென்று பயிர்களை அழித்துவிடுவது, சிங்களப் படைகளின் ஒரு வழக்கமாகவே இருந்து வருகின்றது. தமிழர்களிடம் எஞ்சியிருக்கும் சேமிப்புக்களை இல்லாதொழித்து, அவர்களை ஒட்டாண்டிகளாக்கி விடுவதுதான் சிங்கள அரசின் நோக்கம்.

இவ்விதமான திட்டமிட்ட நடவடிக்கைகளின்மூலம் தென் தமிழீழத்தின் மக்களை நாடோடிகளாக்கி,உணவிற்காகச்சிங்கள அரசிடமே கையேந்தும் மக்களாக மாற்ற, சிங்கள அரசு முயற்சித்துக்கொண்டிருக்கின்றது.

இதனுடைய நோக்கம் தென் தமிழீழத் தமிழர்களது தேசிய பலத்தைச் சிதைத்து, அங்கே தமிழர்களின் வீதாசாரத்தைப் பெரிதும் குறைத்து, விடுதலைப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து, தென் தமிழீழத்தைச் சிங்கள மயமாக்குவதுதான்.

இதேவேளை வட தமிழீழத்தைப் பொறுத்தவரை இனப்படுகொலையைத் தீவிரப்படுத்த சிங்கள அரசு முயன்று வருகிறது.

இதன் அடுத்த கட்டமாக வட தமிழீழத்தில் – குறிப்பாக யாழ். குடாநாட்டினுள்– பெரிய அளவில் இனப்படுகொலையைச் செய்து விடுதலைப் போராட்டத்தை நசுக்க, சிங்களப் படைகள் ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கின்றன. கிளாலிகடற்பயணத்தைத் தடைசெய்தும், சிங்களப் படைகளை விலக்காமல்பூநகரிப்பாதையைத் திறந்தும் அதற்குரிய உகந்த சூழலை உருவாக்குவதில், சிங்கள அரசு தீவிரமாக வேலை செய்து வருகின்றது.

இப்படையெடுப்பிற்காகவே பல நவீன போர் விமானங்களையும், உலங்கு வானூர்திகளையும், கடற்படை விசைப் படகுகளையும் கொள்வனவு செய்துள்ளதுடன், புதிதாக ஆட்களையும் படைக்குத் திரட்டி வருகின்றது என்பது, வெளிப்படையான ஒரு உண்மை.

இப்படையெடுப்பு சிங்கள அரசு எதிர்பார்ப்பது போல வெற்றியாக அமையுமானால், தென் தமிழீழத்தில் சிங்களப் படைகள் செய்த அட்டூழியங்களைவிட நூறு மடங்கு கொடுமைகளை, குடாநாட்டில் அவை மேற்கொள்ளும். ஏனெனில் குடாநாடுதான் புலிகளின் கோட்டை என்றும், போராட்டத்தின் இதயமென்றும், போருக்கு வேண்டிய ஆள் – பொருளாதார பலம் இங்கேதான் உண்டென்றும், சிங்கள அரசு கருதுகின்றது. எனவே இதயத்தைப் பிடுங்கி, கோட்டையை உடைத்து, தமிழர்களின் பலத்தைக் குறைக்க, பாரிய தமிழ் இனப்படுகொலையில் சிங்கள ஆயுதப் படைகள் ஈடுபடும்.

இத்தகையதொரு இனப்படுகொலைக்கு ஊக்கம் கொடுப்பதுபோலவே, சிங்கள தேசத்தின் பெரும்பாலான பத்திரிகைகளும், அரசியல்வாதிகளும், பௌத்தமதத் தலைவர்களும், புத்திஜீவிகளும் எழுதியும் – பேசியும், சிங்கள இனத்திற்கு மேலும் மேலும் இனவெறியூட்டி, பல்லாயிரம் சிங்கள இளைஞர்களைப் படையிலும் சேர்த்து வருகின்றனர்.

இந்த இன அழிப்புப் போருக்காக பெருந்தொகையான பணத்தை ஒதுக்கவும், சிங்கள தேசம் தயாராகவே இருக்கின்றது. 'போர்மூலம்' தான் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என, சிங்கள தேசம் ஒருமித்த குரலில் கூறுகின்றது. 'போர்மூலம்' என்பதன் பொருள் 'தமிழ் இனப் படுகொலை மூலம்' என்பதே ஆகும்.

ஆகவே, போர்வெறிகொண்ட சிங்களப் பேரினவாதத் திடமிருந்து தமிழினம் தப்பிப்

(11 ஆம் பக்கம் பார்க்க)